விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 06 திங்கட்கிழமை (20.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 183

# ஜே.வி.பியை அரசுடன் இணைக்க பிரதமர் ராஜபக்ஷ தீவிர முயற்சி

## தன்னை சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்

(நமது நிருபர்)

**ஜே.வி.பியை மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் இணைத்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முயற்சியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.**

**நாளை மறுதினம் இது தொடர்பாக தன்னுடன் சமரசப் பேச்சுக்கு வருமாறு ஜே.வி.பிக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.**

(12ஆம் பக்கம் பார்க்க)

## உணர்வெழுச்சியுடன் நடந்த சுயநிர்ணய பிரகடன நிகழ்வு

'எங்கள் நிலத்தில், எங்கள் பலத்தில்,எங்கள் சுயத்தை நாமே நிர்ணயிப்போம்' என்ற அம்சத்தை வலியுறுத்தும் தமிழ்த்தேசியத்தின் குரல் பேளெரழுச்சி நிகழ்வு நேற்று நடை பெற்றது.

நேற்றுக்காலை 10.45ற்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமான இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட மனித உரிமைகள் அமைப்புக்களின்' ஒன்றியத்தலைவர் பரமநாதன் தலைமை தாங்கினார்.

முன்னதாக பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், மாவீரர் 2ம் லெப்டினட் சரத்பாபுவின் தாயார் திருமதி கந்தசாமி, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சூ.சிறில், வலிகாமம் வடக்குகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசச் செயலாளர் பத்மராஜா, சிவசிறீ மகாகணபதீஸ்வரக்குருக்கள், அருட்தந்தை ஜெபநேசன் ஆகியோர், ஏற்றி வைததனர். தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஏற்றி வைத்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் முடிவில் மாற்றமில்லை-ஜே.வி.பி

### ஜனாதிபதிக்கு மீண்டும் கடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பு தொடர்பாக அரசு மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைகளையும் ஜே.வி.பி எதிர்க்கும் என்று அதன் பொதுச்செயலர் ரில்வின் சில்வா மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே ஜே.வி பியின் நிலைப்பாட்டை அவர் மீண்டும் ஒரு முறை தெரிவித்துள்ளார்.

அரசு, விடுதலைப்புலிகளுடன் முறையான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு நிபந்தனைகளை விதிக்காமலேயே பொதுக்கட்டமைப்புக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை ஏற்க முடியாது.

பொதுக்கட்டமைப்பு ஒவ்வொரு தரப்பினருக்கும் தனிப்பட்ட பிரதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் வெளிநாட்டு பயணத்தை இடைநிறுத்த பணிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுப் பயணங்கள் எதனையும் மேற்கொள்ளாது நாட்டிலேயே இருக்குமாறு சகல அமைச்சர்கள்,எம்.பிக்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

யூன் 16அன்று ஜே.வி.பி.வெளியேறியதை அடுத்து அமைச்சரவையை மீள உருவாக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். 2004 ஏப்பிரலில் அமைக்கப்பட்ட அமைச்சரவைக்கு பின்னர் முதல் தடைவையாக மீள அமைக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் அண்மையில் இடம் பெற்ற அரசியல் நெருக்கடியின் போது தன்னுடன் துணையாக இருந்த எம்.பிக்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு அமைச்சு, பிரதி அமைச்சு பதவிகள் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் சில வாரங்களுக்குள் ஏற்படவுள்ளது. புதிய மாற்றங்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## றெஜினோல்ட் கூரே நேற்று இராஜினாமா

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் முதலமைச்சர் றெஜினோல்ட்கூரே தனது பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை மாகாண ஆளுநரிடம் கையளித்தார். முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிசன்-குஜரால் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் மற்றும் இந்தியாவின் முன்னால் பிரதமர் குஜரால் ஆகியோர் இன்று இலங்கை வருகின்றனர்.

ஐந்து நாள் விஜயம் மேற்கொணடு இலங்கை வரும் விடார்ஹெல்கிசன் ஜனாதிபதி மற்றும் அரசியற் கட்சி தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார் அடுத்து விடுதலைப்புலிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்.

இவர் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றில் சமர்ப்பிக்கு முன் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்து

### ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தகவல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடப்பட்டவுடன் அதனை பாராளுமன்றில் சமர்ப்பிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

நாளை மறுதினம் பொதுக்கட்டமைப்பு பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அதற்கு முன்னதாக அதில் கையெழுத்திடக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொர்துக்கட்டமைப்பை சபையில் சமர்ப்பிக்கும் போது ஜே.வி.பியினருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் கடும்வாக்குவாதம் இடம் [illegible]றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[illegible]பு கைச்சாத்திடப்பட்ட பின்னர் [illegible]ாளுமன்றில் சமர்ப்பிக்கும் ஜனாதிபதியின் திட்டமானது ஐ.தே.கவினதும் தமிழ்க்கூட்டமைப்பினதும் எதிர்ப்பினால் தீர்மானிக்கப்பட்டது.

கைச்சாத்திடமுன் பாராளுமன்றில் சீர்திருத்துவதற்கு இவை இரண்டுமே எதிர்ப்புத்தெரிவித்திருந்தன. பாராளுமன்றில் பொதுக்கட்டமைப்பு சீர்திருத்தத்திற்கு உள்ளாவதை தாம் எதிர்ப்பதாக தமிழ் கூட்டமைப்பு சர்வதேசசமூகத்திற்கு அறிவித்திருந்தது.

அடுத்த பொதுக்கட்டமைப்பு ஜயந்த தனபாலவினாலும் புலித்தேவனினாலும் கைச்சாத்திடப்பட வேண்டுமென புலிகள் கோரியிருந்தனர். எனினும் பொதுக்கட்டமைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியத்தின் குரல்

(யாழ்ப்பாணம்)

பௌத்த சிங்கள பேரினவாதத்தை தமிழ்மக்கள் நிராகரித்து விட்டதையும், தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமைகளுடனும வாழ்வதற்கு முடிவு செய்து விட்டதையும் சர்வதேச சமூகத்திற்கும் தென்னிலங்கை தலைவர்களுக்கும் தெரியப்படுத்தும் பிரகடனத்தை ஏற்படுத்தும் தமிழ் தேசியத்தின் குரல் நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனம் வருமாறு,

தென்னிலங்கையில் பயங்கரமாக சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகின்றது. தமிழர்களுக்கு இது புதிது அல்ல. இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்ததாக சொல்லப்படும் காலத்தில் இருந்து இலங்கைத்தீவு முழுவதும் தமக்கே உரியது என்பதுதான் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நிலைப்பாடு.

ஆனால் இலங்கைத்தீவில் நீண்ட காலமாக தன்னாட்சி இறமையுடன் தமிழ்மக்கள் வாழ்ந்து வந்துள்ளமையை புறந்தள்ளி, தமிழ்மக்களை இரண்டாம் தரப்

(12ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# "தமிழ்த்தேசியத்தின் குரல்" நிகழ்வுக் காட்சிகள்











படங்கள்:- ஞா.ஐங்கரன்

## எங்கும் தமிழர்கள் ஒன்றாய் எழுந்தோம்

சுதந்திர வாசல் திறந்திட வேண்டும்
தெருவினில் இராணுவம் அகன்றிட வேண்டும்
எங்களின் சொந்த நிலத்தினில் வாழும்
உரிமை வேண்டும் நிம்மதி வேண்டும்

எங்கள் நிலத்தினில் அந்நிய இராணுவம்
குந்தியிருக்குது கொடுமைகள் புரியுது
எங்களின் பிள்ளைகள் பயத்தில் உறைவது
கண்டு தினமும் நெஞ்சு கொதிக்குது

எங்களின் சந்தி தெருக்களில் எங்கும்
கோயில் குளங்கள் குடிமனை எங்கும்
தோட்டம் துரவுகள் வயல்வெளி எங்கும்
சிறுமணல் விரித்த கடல்வெளி எங்கும்
மழலைகள் ஆடும் பள்ளிகள் எங்கும்
காக்கி உடுத்துக் கைகளில் ஆயுதம் ஏந்தியபடியே
குந்தி இருக்கிற சிங்கள இராணுவச் சிப்பாயே
ஆயத்தம் ஆகு உன் ஊருக்குப்போக

புத்தரின் தர்மம் காற்றில் பறந்தது
போதனை எல்லாம் பொய்யாய்ப் போனது
சிங்கள பௌத்தம் கொன்றது புத்தரை
பேரினவாதப் பேய்களின் ஓலம்
கொழும்பில் கேட்குது கோலம் கொண்டாடுது

இங்கு தமிழர்கள் அனைவரும் எழுந்தோம்
தலைவன் பெயர் சொல்லிப் பயங்கள் களைந்தோம்
பேரினவாதப் பேயை விரட்டுவோம்
சிங்கள பௌத்த வெறியையும் வெல்வோம்
தமிழரின் உரிமையைத்தரவே மறுத்து
வெறிகொள் சிங்கள தேசம் உமக்கு
உயிரும், குருதியும் கொடையாய் கொடுத்து
விடுதலை வேண்டும் தேசம் எமது

செம்மண் புழுதியில் தோய்ந்த மனிதர்கள்
செந்நெல் வயல்களில் சேறு குளித்தவர்
ஆழக்கடலெங்கும் ஓடி உழைத்தவர்
செங்களம் ஆடிடும் வீரரை ஈந்தவர்
எங்களை நாமே ஆளும் வலுவுடன்
எங்கும் தமிழர்கள் ஒன்றாய் எழுந்தோம்
தேசிய வேள்வியில் அனைவரும் இணைந்தோம்
சுதந்திர வாசல் திறந்திட விரைந்தோம்.

தமிழ் தேசியத்தின் குரலுக்காய்
செ.விந்தன்
அரங்க செயற்பாட்டுக்குழு

# சாத்வீகப் போர் ஆயுதப்போராட்டமாக மாறியமைக்கு சிங்கள-பௌத்த பேரினவாதமே அடிப்படைக் காரணம்

**யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற "தமிழ்த்தேசியத்தின் குரல்" நிகழ்வில் அருட்தந்தை வண. ஜி. பேணாட் அடிகளார் ஆற்றிய சிறப்புரை.**

(1) இன்றைய நிகழ்வின் நோக்கத்தையும், பின்னணியையும் விளக்குமாறு கோரப்பட்டுள்ளதன்படி எனது உரையை அமைக்கின்றேன்.



யாழ்.மக்களிடையே அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்விலிருந்து பெறப்பட்ட கருத்துக்களை மக்களின் மதிப்பைப் பெற்ற பெரியோர் முன்வைத்து அவர்களுடைய ஆசியுடன் அவற்றை இலங்கைத்தீவின் தென்பகுதி சமூகத்திற்கும், சர்வ தேச சமூகத்திற்கும் தெவிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

இவ்வாறு, ஒன்றோடொன்று தொடர்புடைய மூன்று விடயங்கள் வெளிவருகின்றன.

I) மொழி-மதம் என்ற வடிவங்களில் எம்மை எதிர்த்து நிற்கும் பேரினவாதம்.

II) இதன் வரலாற்றுப் பின்னணி.

III) இப்பேரினவாதத்தின் மேலாதிக்கத்திலிருந்து நாம் பாதுகாக்கவேண்டிய நமது சுயநிர்ணய உரிமை.

இந்த நோக்கம் சரியாகப் புரிந்து கொள்ளப்படவேண்டுமென்பதற்காக முதலில் சில விளக்கங்கள் கொடுக்கப்படவேண்டியுள்ளன.

(I) சிங்கள மக்களையோ, பௌத்த மதத்தையோ நாம் அவமதிக்கவில்லை. மாறாக அம்மக்களையும் மதத்தையும் மதிக்கின்றோம்.

(II) எமது தேசியத்தைப் பற்றி நாம் குறிப்பிடும்போது, பிற இனங்களின் தேசிய உணர்வையும் மதித்துத்தான் குறிப்பிடுகின்றோம்; ஆனால் எவருடைய தேசிய உணர்வும் மேலாதிக்கம் செலுத்தும் பேரினவாதமாக பூதாகாரமெடுத்து எமது கௌரவத்தைக் காயப்படுத்த வேண்டாம் என்பதே எமது குரல்.

III) பேரினவாதத்தின் மத்தியிலும்,தென் னிலங்கையில் அதற்கெதிரான குரல்கள் அன்றும் இன்றும் எழுதப்பட்டுள் ளன. என்பதை நாம் கவனிக்கத் தவறவில்லை.

### மக்களின் கருத்து

25 ஆண்டுகளாக எம்மை சிதைத்துவரும் போர் உருவாவதற்கு இப் பேரினவாதமே காரணம்.

இப் பேரினவாதத்தை முறியடிப்பதற்கு தென்னிலங்கையில் பலம்வாய்ந்த, 'அரசியற் சமூகமோ, அரசியற் கலாசாரமோ, தலைமைத்துவமோ இலங்கை விடுதலைபெற்ற காலத்திலிருந்து இதுவரை காணப்படவில்லை. இனிமேல் எமது எதிர்காலத்தை நாமே நிர்ணயித்துக்கொள்வோம். இதை விளக்குவதற்கு அரசியல் வரலாற்றை சற்றுப் பார்க்கவேண்டியுள்ளது.

### பேரினவாதத்தின் வெளிப்பாடுகள்

#### பிரஜா உரிமைச்சட்டம்

பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்டதையடுத்து, புதிய அரசு "பிரஜா உரிமைச்சட்டம்" ஒன்றை அமுலாக்கம் செய்து, மலையகத்தமிழ் மக்களின் பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றை இதன்மூலம் பறித்தது மட்டுமன்றி, ஒட்டுமொத்தமாக இலங்கை வாழ் தமிழ்மக்களின் அரசியற் பேரம்பேசும் பலத்தையும் அழித்துவிட்டது.

அது ஒரு புறமிருக்க, மறுபுறம் சிங்கள மகா சபையானது சிங்களத்தை அரச கரும மொழியாகவும், பௌத்த மதத்தை அரச மதமாகவும் ஆக்கவேண்டுமென்ற கொள்கையைப் பரப்பிவந்தது. இதற்கமைய, முந்திய தசாப்தங்களில் சமஷ்டி முறைமையை முன்வைத்து தன் பரந்தமனப்பாங்கை வெளிப்படுத்திய பண்டார நாயக்கா, சந்தர்ப்பவாதியாய் மாறி, 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் சிங்களம் மாத்திரம் என்ற கோஷத்தை முன்வைத்தார். அதன்மூலம் பெரும் வெற்றியீட்டினார்.

#### தனிச்சிங்களம்

"இருமொழியென்றால் ஒரு நாடு; ஒரு மொழியென்றால் இரு நாடுகள்" என்ற சிங்களப் பெரியார் ஒருவரின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது, 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டது. இதை எதிர்த்து தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றின் முன் உண்ணாவிரதம் இருந்தனர். அது ஒரு சாத்வீகப் போராட்டம். ஆனால், அதை முறியடிப்பதற்கு வன்முறை பாவிக்கப்பட்டது. இதனைக் கண்டித்து தமிழ் மக்களிடமிருந்து பெரும் எதிர்ப்புகள் வெடித்தன. அவையெல்லாம் அகிம்சை வடிவிலேயே அமைந்தன.

#### "பண்டா-செல்வா" ஒப்பந்தம்

எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டிய நிலையில் பிரதமர் பண்டாரநாயக்கா, தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். இதனையடுத்து ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இது சமஷ்டி அரசாங்க முறையை அடிப்படையாகக் கொண்டது.

இந்த ஒப்பந்தத்தில்,

- தமிழ்மொழி இலங்கைச் சிறுபான்மையினரின் மொழியென ஏற்றுக்கொள்ளுதல்.
- அதை வடக்குக்கிழக்கு மாகாண மொழியாக்குதல்,
- வடக்குகிழக்கைப் பொறுத்தவரையில் பிராந்திய சபைகளை ஏற்படுத்தல்,
- குடியேற்றத்திட்டங்கள் மற்றும் பிரஜா உரிமைச்சசட்டம் என்பவற்றை சீர்ப்படுத்தல்.

போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

ஆனால், பௌத்த தலைவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தினார். இவ் எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க முடியாது அவர்களின் முன்னே அங்கு ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாய் கிழித்தெறிந்தார் பிரதமர் பண்டாரநாயக்கா.

#### தமிழ்பிரதேசத்தில் - அரசாங்க அனுசரணையுடனான குடியேற்றங்கள்

இக் குடியேற்றங்களின் விளைவாக கிழக்குப் பிரதேசத்தில் சிங்கள மக்களின் தொகை 1946இலிருந்து 1976வரை 10 மடங்காகப் பெருகியது. இது தமிழ் மக்கள்மீது பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஏற்கனவே நாடளாவிய ரீதியில் சிறுபான்மையினராக இருந்த அவர்கள் தங்கள் சொந்த மரபுவழி தாயகத்திலேயே மேலும் சிறுபான்மையினராக்கப்பட்டனர். புதிய தேர்தல் தொகுதிகள் ஆக்கப்பட்டபோது அவர்களின் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரமும், பேரம்பேசும் பலமும் மேலும் குன்றிப்போயின.

#### "டட்லி-செல்வா" ஒப்பந்தம்

1965இல் மற்றுமோர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும் செல்வநாயகத்திற்கும் இடையே நடந்தது.

இதில்,

- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியை நிர்வாக மொழியாக்குவது,
- அங்கு, நீதிமன்றத்தில் தமிழ்மொழியைப் பாவித்தல்
- காணி வழங்கும்போது குறிப்பிட்ட பிரதேசத்தில் முதலில் காணியில்லாத தமிழ்பேசும் மக்களுக்கு, அடுத்து வேறு இடங்களில் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள், மூன்றாவதாக ஏனைய மக்களுக்கும் என்ற முறையிலேயே முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

போன்ற ஆலோசனைகள் இந்த ஒப்பந்தத்திலேயே இடம்பெற்றன.

குறைந்தளவிலான கோரிக்கைகளைக்கொண்ட இந்த ஒப்பந்தத்திற்கும் எதிர்ப்பு காணப்பட்டது. முன்னர் "பண்டா-செல்வா" ஒப்பந்தத்திற்கு ஆதரவாய் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஆட்சியை இழந்ததும் இதை எதிர்க்கும் கட்சியாக செயற்பட்டது. பௌத்த தலைவர்களும் முன்னர் போன்று எதிர்ப்பவர்களாகவே இருந்தனர். இதன் விளைவாக இவ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த நீண்டகாலமாக அரசினால் முடியவில்லை.

(தொடரும்)

# பாற்பண்ணைப் பகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மூன்றுநாள் தொடர் நடமாடும் முகாம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதி கிராமமக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையும், அரசியல் துறையும் இணைந்து நடமாடும் முகாம் ஒன்றை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடாத்தின.

இவ் நடமாடும் முகாம் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வருகின்றது.

இவ் நடமாடும் முகாமில் கடந்த வெள்ளிக்கிழமை அரச திணைக்களங்களின் ஊடாக அப்பகுதி மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்புாக ஆராயப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று நேற்றுமுன்தினம் யாழ்மாவட்ட தமிழீழ பொருண்மிய நிறுவனம், கோண்டாவில் கால்நடை வைத்திய அதிகாரியுடன் இணைந்து திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்ததோடு எதிர்காலத்தில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், ஆடு,மாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல், கோழிகளுக்குத் தற்போது பரவிவரும் கொள்ளை (வைரஸ்) நோய்க்கு மருந்து வழங்குதல், கால் நடைகளுக்கு பூச்சி மருந்துகள் வழங்கல், நலன் தட்டல் செய்தல் போன்ற மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டன.

இதே போன்று யாழ்.மாவட்ட தமிழீழ கல்விக் கழகம், நல்லூர் கோட்டக் கல்விப் பணிமனையுடன் இணைந்து திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் பாடசாலை செல்லும வயதிலுள்ள பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை இனங்கண்டு அம் மாணவர்களை பாடசாலையில இணைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதேபோன்று இக் கிராமத்தில் தொழில் வாய்ப்பில்லாதவர்களுக்கு சுயதொழில்களை ஏற்படுத்திக் கொடுத்து கிராமிய சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்களுடன் இணைந்து பயிற்சிகளை வழங்கல், இக் கிராமத்தில் மலசல கூடங்கள் அற்றவர்களுக்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்தல் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ந-19)

# பிரதீப் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஆட்சேர்ப்பதை உடன் நிறுத்துக !

## உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதை நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எல்.திஸாநாயக்க தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்ய ஏற்றுக்கொண்டே இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மனுவில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உட்பட 21 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதிப்பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தாம் பூரண தகுதிகளைக் கொண்டுள்ள போதிலும் தமக்குப் பதவி உயர்வு வழங்காமல் தன்னைவிட சிரேஷ்ட தன்மையற்ற அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருப்பதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி உயர்வுக்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-9)


# CAREER OPPORTUNITIES AT GEORGE STEUART (AGENCIES) LTD

GSA

*(North / East territory)*

SALES CUM MEDICAL REPRESENTATIVES

**GEORGE STEUART (AGENCIES) LIMITED, a subsidiary of the oldest mercantile establishment in Sri Lanka, is a fast growing marketing and distribution enterprise for medical products representing well-known Companies worldwide.**

**We are looking for personable, dynamic, result oriented and self motivated individuals to join the company's expansion programme.**

**Applicants should have the following qualifications:**

- **GCE A/L qualification in Bio Science or Mathematics**
- **Previous experience in selling generic and branded pharmaceutical products and 2-3 years medical detailing experience in recognized pharmaceutical company.**
- **A good command of English. Knoweldge of additional languages will be an advantage.**
- **Age should not be more than 30 years.**
- **Candidates residing in the North and East provincial areas will be preferred**
- **A professional qualification in Marketing will be an added advantage.**

**An attractive remuneration package, a great working environment and a rewarding career awaits the selected candidates.**

**Please apply within ten days with complete bio - data including details of previous and current employment, copies of academic professional certificates and names of two non-related referees to:**

**Manager - Human Resources**
**GEORGE STEUART (AGENCIES) LTD**
**NO.45, Janadhipathi Mawatha,**
**Colombo 1**
**E-mail: hr@georgesteuarts.com**

(C/1448)


# இரு வேறு விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பண்ணை வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஜே.கலிசியஸ் (வயது-19) என்பவரே காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம ஊரெழுவில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனும்திக்கப்பட்டுள்ள்னர். (ந-19)

# தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

கரவெட்டிப்பிரதேசத்தில் கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் தேசிய கலை இலக்கியப் பெருவிழா 2005ற்கான மே மாதம் 10,11 ஆம் திகதிகளில் பிரதேசமட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிப் பெறுபேறுகள் வருமாறு,

### கட்டுரை - கனிஷ்ட பிரிவு

1 ஆம இடம்:- சூ.சூரியதாட்சாயினி-(நவீன கலைவடிவங்களில் உள்ள சிறப்புகள்) விக்னேஸ்வராக்கல்லூரி, 2 ஆம் இடம்:- ஜெ.துர்க்கா-(வாசிப்பு மனிதனை முழுமையானவன் ஆக்குகின்றது) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம்:- சீ.கீர்த்தனா-(பழைய குடையின் சுயசரிதை) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

### சிரேஷ்ட பிரிவு

1 ஆம் இடம்:- இ.கௌரீசன் (ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு இயற்கை தந்த செய்தி சுனாமி அனர்த்தம்) உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, 2 ஆம் இடம்:- ஆ.மோகனப்பிரியா-(நாட்டில் ஒழுக்க நெறியை வளர்ப்பதற்குச் சமயக் கல்வியின் முக்கியத்துவம்) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம்:- அ.அபிராமி (தொல்பொருட்களைப் பாதுகாப்பது எமது தேசியப் பொறுப்பாகும்) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

### கவிதை - திறந்த போட்டி

1 ஆம் இடம்:- திரு.ம.கணேசலிங்கம்-(கொடிய அலைகள்) அல்வாய் தெற்கு அல்வாய், 2 ஆம் இடம்:- பொ.பாரதி-(கொடிய அலைகள்) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம்:- வை.கல்சியா-(கொடிய அலைகள்) ஞானாசாரியார் கல்லூரி.

### சிறுகதை - திறந்த போட்டி

1 ஆம் இடம்:- திரு.பொ.சுகந்தன்-(நாடக மேடை) பொன் கந்தையாவீதி, நெல்லியடி, கரவெட்டி, 2 ஆம் இடம்:- ம.ஷர்மினி-(மண்ணிற்காக மலர்கிறாள்) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம்:- திருமதி நா.ஆனந்தராணி-(ஈழத்தின் அன்னை) மகாத்மா வீதி, நெல்லியடி.

### குறுநாடகம் - திறந்த போட்டி

1 ஆம் இடம்:- திருமதி நா.ஆனந்தகுமாரி-(வழி பிறந்தது) மகாத்மா வீதி, நெல்லியடி, 2 ஆம் இடம்:- க.இளவரசன்-(துயரில் இருப்பவருக்கு கைகொடுக்கும் சமூகம்) விக்னேஸ்வராக் கல்லூரி, 3 ஆம் இடம்:- திரு.கி.செந்திவேல் (சீதனமா) கீரிக்கந்தத் தோட்டம், கரணவாய் மத்தி கரவெட்டி.

### சித்திரம் - சிரேஷ்டபிரிவு

1 ஆம் இடம்:-ச.பிறேம்ஜா-(ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு இயற்கை தந்த செய்தி சுனாமி அனர்த்தம்) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம்:- மு.ரவிவர்மன்-(ஆற்றங்கரையோரம்) உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, 3 ஆம் இடம்:-ர.விஜிதா-(ஒற்றுமையாகச செயற்படுவதற்கு இயற்கை தந்த செய்தி சுனாமி அனர்த்தம்) வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

### திறந்தபோட்டி

1 ஆம் இடம்:- திருமதி கி.நித்தியாஞ்சலி-(ஆற்றங்கரையோரத்தில் ஓர் இரவு) நாவற்கலட்டி, கரணவாய் தெற்கு, 2 ஆம் இடம்:- திரு.கி.செந்திவேல்-(கொடிய அலைகள்) கீரிக்கந்தத் தோட்டம், கரணவாய் மத்தி கரவெட்டி.

### நாட்டுப்புறப்பாடல் -கனிஷ்டபிரிவு

1 ஆம் இடம்:- ஜெ.ஹம்ஸவதி-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம்:- இ.சாளினி-வதிரி திரு இருதயக்கல்லூரி, 3 ஆம் இடம்:- நா.தேனுகா-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

### சிரேஷ்ட பிரிவு

1 ஆம் இடம்:-ந.ரஞ்சித்பாலன்-(நெல்லியடி மத்திய மகாவித்தி., 2 ஆம் இடம்:- த.இந்திக்கா-(நெல்லியடி மத்திய மகாவித்தி.

### திறந்தபோட்டி

1 ஆம் இடம்:- திரு.கி.செந்திவேல்-கீரிக்கந்தத் தோட்டம், கரணவாய் மத்தி, கரவெட்டி, 2 ஆம் இடம்:- நா.தர்சிகா-மகாத்மா வீதி, நெல்லியடி, 3 ஆம் இடம்:- திரு.ம.கணேசலிங்கம்- தினைப்புனம், அல்வாய்.

இவற்றில் 1ஆம் இடம்பெற்ற ஆக்கங்கள் அனைத்தும் மாவட்ட மட்டப் போட்டிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ந-52)

# இராசி பலன்

**20.06.2005**
**(ஆனி 06, திங்கட்கிழமை)**
**திரயோதசி பிற்பகல் 2.05 மணிவரை**
**அனுஷம் முன்னிரவு 11.48 மணிவரை**
**இராகுகாலம் 7.24 -8.54 மணிவரை**
**சுபநேரம் 11.54 - 1.24 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தடங்கல், போசன சுகம். |
| இடபம் | எடுத்த கருமங்கள் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, நல்ல வருமானம், மனோ தைரியம். |
| மிதுனம் | தேக நலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபநிகழ்வு, தனலாபம். |
| கடகம் | அஜீரணரோகம், காரிய தாமதம், மனக் கவலை, உறவினர் வெறுப்பு. |
| சிங்கம் | மாதாசுகம், காரிய தாமதம், மனச் சஞ்சலம், தனவிரயம். |
| கன்னி | மனோ தைரியம், முயற்சி கைகூடும், போசன சுகம், கீர்த்தி. |
| துலாம் | கௌரவக் குறைவு, போசன சுகக் குறைவு, வேலைச் சுமை, அதிக செலவு. |
| விருச்சிகம் | சயனசுகம், புதிய முயற்சி, சிந்தனை மிகுதி, வெகுமானம். |
| தனுசு | பிறருக்கு உதவுதல், வீண் அலைச்சல், சுப செலவு, பிரயாணம். |
| மகரம் | நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்க்கை, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் நன்மை. |
| கும்பம் | நன்கொடை, பெரியோர் சந்திப்பு, இஷ்ட சித்தி, ஆரோக்கியம். |
| மீனம் | எதிர்பாராத செலவு, சத்துரு பயம், காரிய தாமதம், பிரயாணம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

*-வளவன்*

# வீதியுலா வருகின்ற புதிய தேர்

வடஅல்வை பதியதனில் விளைந்தநல் ஆல்நிழலில்
வந்தமர்ந்த விநாயகனின் அருளும் ஒளியும்
கடலோரக் காற்றும் கதைசொல்லும் பனங்கீற்றும்
கூடிவரும்கொலுநாளில கொடியேற்றும்உற்சவமும்
சுடர்விடும் ஆன்மீக ஏற்றமதின் பேற்றதனால்
சேருகின்ற புதியதேர் மாறாம்புல பதிசேர்ந்தே
வடம்பிடித்து தேரிழுத்து வணங்குகிறோம் அப்பனே!
வாழவழி தந்திடுவாய் வித்தகனே விநாயகனே

அல்வையுர் கே.ஆர்.திருத்துவராஜா

## இன்று ஒரு தகவல்

# மோட்சம்

ஒருவர் நீண்ட நேரமாக ஆகாயத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். "அங்கே என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன். "எனக்கு மோட்சம் கிடைக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது... அதுதான் எங்கேயிருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார். "அது அங்கே இல்லை சார்'' என்றேன். "அப்படியென்றால் அது இருக்கும் இடம் உங்களுக்குத் தெரியுமா?'' என்றார். "அது எனக்குத் தெரிந்தால் இப்படி ஏன் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்?'' என்றேன். "அட சும்மா போங்கள் சார்'' என்று கூறிவிட்டு அவர் மீண்டும் ஆகாயத்தைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்.

பெரியவர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா? மோட்சம் என்பது ஆகாயத்திலிருந்து விழுவதும் இல்லை: பூமியில் இருந்து எழுந்து வருவதுமில்லை. அது இந்த உலகத்தில் இருப்பதும் இல்லை. மோட்சம் என்பது ஒரு நிலை... அந்த நிலையை நம்மால் அடைய முடியுமா? முடியும்! இதயத்தில் இருக்கும் ஆசைகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்து எறிந்துவிட்டால்... அதன்பின் உண்டாகும் நிலை இருக்கிறது பாருங்கள்... அதுதான் மோட்ச நிலை.

இதற்கு ஒரு உதாரணம் இப்போது சுலபமாக உயரே போகக் கூடியது எது? காற்றில் ஒரு காகிதம் உயரப் பறக்கும்: பஞ்சும் பறக்கும் இதற்கு என்ன காரணம்? அவையிரண்டிலும் 'கனம்' இல்லை. அவையிரண்டும் லேசாக உள்ளது... அதனால் பறக்கும். மனிதனும் அப்படிப் பறக்க வேண்டும் அதற்கு என்ன செய்யலாம்? இறக்கை கட்டிக்கொள்ளலாமா? அல்லது வேறு எதிலாவது ஏறிப்பறக்கலாமா?

அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். அவனிடம் உள்ளடங்கியிருக்கும் ஆசைகள்... சுயநல நாட்டத்தோடு பொருட்களைச் சேர்க்கும் தன்மை இவைகள் தாம் மனிதன் மீது ஒரு சுமையாக அழுத்திக் கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் ஆசைகள் அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றன. சுயநல நாட்டமோ ஆகாயத்தையே எட்டிப்பிடிக்கும் அளவுக்குப் பெருகிக் கொண்டிருக்கிறது. இப்படி மனதின் பளு,புலன்களின் பளு இரண்டும் மனிதனை அழுத்தி வைத்திருக்கும் போது அவன் எங்கே ஆகாயத்தில் பறப்பது? எழுந்திருப்பதே கஷ்டம்! அவன் எங்கே மோட்ச நிலையை எட்டிப்பிடிப்பது.

மோட்சம் என்றால் அது ஏதோ பிரத்தியேகமான பிரதேசம் அல்ல. அது ஏதோ உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் மாதிரி எங்கேயோ இருக்கிறது என்று நினைக்கக்கூடாது. அதேபோல் ஒரு குருவோ அல்லது சாமியாரோ இந்தாருங்கள் உங்களுக்கு மோட்சம் என்று எடுத்துக்கொடுத்து விடவும் முடியாது. ஒருவருடைய் உண்மையான தன்மை அவருக்குள் இருக்கும் மெய்ப்பொருள். அதை உணர்வது தான் மோட்சம் எனப்படுவது! அதை விட்டுவிட்டு வெளியில் இந்தப் பெயரைச் சொல்லி வியாபாரம் செய்துகொண்டு இருப்பவர்களையெல்லாம் நம்பாதீர்கள்.

வெளியுலகத்தில் பிரயாணம் செய்வது போல் உங்கள் உள்ளுக்குள்ளேயே பிரயாணம் செய்யுங்கள் சார். அதுதான் மோட்சத்துக்குப் போகும் வழி உங்களுக்கு நன்கு தெரியும். ஒரு விமானத்தில் குறிப்பிட்ட அளவுதான் பாரம் ஏற்ற வேண்டுமென்று கணக்கு உள்ளது. அதற்கு மேல் ஏற்ற மாட்டார்கள். ஒரு இயந்திரத்திற்கு இவ்வளவு கட்டுப்பாடு இருக்கும்போது ஆன்மீகத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது எந்த அளவுக்கு அவசியம் என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

மிருகங்களுக்கு வெளிப்பார்வைதான் உண்டு. உள்பார்வை கிடையாது. பச்சைப்புல் எங்கேயாவது கண்ணில் பட்டால் பசுமாடு நேராக அங்கே போய்விடும். அது யாருடைய நிலம் அங்கே போவது சரியா தவறா என்றெல்லாம் யோசிக்காது. மனிதன் அப்படி இல்லை. மனதை உடையவன் மனிதன். இவன் உள்பார்வை பார்க்கவேண்டும். அங்கே உட்கார்ந்திருக்கும் சுமைகளைத் தூக்கி எறிய வேண்டும் அப்போது தான் ஆகாயத்தில் பறக்க முடியும்... மோட்சத்தை அடைய முடியும். அதைவிடுத்து சுலோகம் சொல்வது. தியானம் செய்வது. பாராயணம் செய்வதெல்லாம் பயன்படாது.

ஒருவர் சொன்னார் "சார் .... நான் ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்பதற்காக அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தேன். கண்ணை மூடித் தியானித்தேன். உடனே எனது சுமை குறைந்தது. இருந்தாலும் ஆகாயத்தில் பறக்க முடியவில்லை. இப்போது நான் தெருவிலேயே பறக்கும்படியாகிவிட்டது''என்றார்.

"என்ன நடந்தது?'' என்றேன். "நான் கண்ணை மூடித் தியானம் செய்தபோது என் பக்கத்திலிருந்தவன் எனது சட்டைப்பையை வெட்டிவிட்டான். அதனால் சுமை குறைந்தது. இப்போது நான் அவனைத்தேடி தெருவில் பறந்து கொண்டிருக்கிறேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசியல் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதித் தேர்தலே சிறந்த வழி

## -ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறியுள்ள நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடாத்துவது அத்தியாவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



கோமகமவில் நடைபெற்ற பெண் களுக்கான சுயதொழில் வாய்ப்புக்கான கடன் வழங் கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜீ.எல்.பீரிஸ், நாடு இன்று அரசியல் ரீதியில் குழப்பமான ஒரு நிலையில் உள்ளது என்று எமது நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தெளிவான கொள்கை கூட்டமைப்பு ஒன்றை உள்ளடக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசைக் கவிழ்த்து பாராளுமன்றத்தைக் கலைத்து ஒழுக்கத்துக்கு மாறாக ஜனநாயகக் கோட்பாட்டுக்கு விரோதமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயற்பட்டார்.

ஜனாதிபதி இவ்வாறு செயற்பட்டமை நாட்டின் மீது பற்றுள்ளதினால் அல்ல. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு செயற்பட்டார். தேர்தலின்போது ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து கூட்டமைப்பு ஒன்றை அமைத்து தேர்தலில் போட்டியிட்டார்.

சந்திரிகாவினதும் ஜே.வி.பியினதும் பொய் வாக்குறுதிகளை நம்பி மக்கள் அளித்த ஆணையினால் ஆட்சிப்பீடம் ஏறிய சந்திரிகாவுக்கு ஜே.வி.பி இன்று காலைவாரிவிட்டது என்றும் குறிப்பிட்டார். (ந-8)

## இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

# அதிக வருமான வரி செலுத்தியவர்களுக்கு தங்க,வெள்ளி அட்டைகள் விசேட மரியாதை

(கொழும்பு)

சரியான முறையில் இறைவரியை செலுத்துவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

2003,2004 வரி ஆண்டு காலப்பகுதியில் 10 இலட்சம் ரூபாவை வரியாகச் செலுத்தியவர்களுக்கு தங்க அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.எல் வீரசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,5 இலட்சம் ரூபாவிற்கும், 10 இலட்சம் ரூபாவிற்கும் இடையிலான வரியாக செலுத்துபவர்கள் வெள்ளி அட்டைகளைப் பெற்றுக்கொள்வார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அட்டைகளை வைத்திருப்போர் அரச நிறுவனங்களுக்கு செல்லும்போது அவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும் என்றும்,

அதிஷ்ட சீட்டிழுப்பு ஒன்றிலும் அவர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றார்கள் என்று தெரிவித்துள்ளார். (அ-9)

# ஜே. வி. பியின் வெளியேற்றம் குறித்த அரசியல் கட்சித்தலைவர்களின் கருத்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி விலகியமையால் அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பு எழுந்துள்ளது.

ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறியமை பற்றி அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு:

### *தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்*

நாம் மிக அவதானமாகவே செயற்படுகிறோம். ஜே.வி.பியின் அடுத்த செயற்பாடு குறித்து நாம் அவதானமாக இருக்கிறோம். எமது நிலைப்பாடு குறித்து நாம் வெகுவிரைவில் நாட்டு மக்களுக்கு அறிவிப்போம். தற்போதைய நிலவரம் குறித்து நாம் கண்காணித்து வருகிறோம் .

### *ஐ.ம.சு கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த*

ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டுச் சென்றாலும் கூட்டமைப்பு உடன்படிக்கை அமுலில் இருக்கும். பொதுக்கட்டமைப்பு தொடர்பில் சாதகமான பதில் கிடைக்காததால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாக ஜே.வி.பியின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார். கூட்டமைப்பு செயலாளர் என்ற வகையில் அதுபற்றி நான் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசிக்கவுள்ளேன். கூட்டமைப்பில் உள்ள கட்சித் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து அடுத்து நாம் என்ன செய்யவேண்டும் என்பது பற்றித் தீர்மானிப்போம்.

அவர்கள் விலகுவதாக அறிவித்த கடிதம் எனக்குக் கிடைத்தது என்பது பற்றியும் எதிர்கால செயற்பாடு குறித்தும் ஜே.வி.பிக்கு கடிதம் எழுதியுள்ளேன். ஜே.வி.பி கூட்டணி அரசாங்கத்தை விட்டு வெளியேறினாலும் கூட்டமைப்பு உடன்படிக்கை அப்படியே இருக்கும் என நான் நம்புகிறேன்.

### *ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க*

எதிர்க்கட்சிக்கு சென்றாலும் ஜே.வி.பி பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. கூட்டணி அரசு நாட்டை மிக மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. மக்களுக்கு வழங்கிய எந்த உறுதிமொழியையும் இந்த அரசு நிறைவேற்றவில்லை. ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகியதால் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அவர்கள் தட்டிக்கழிக்க முடியாது.

வழங்கிய உறுதிமொழிகள் எதனையுமே நிறைவேற்றாத ஒரே அரசாங்கம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூடடமைப்பு அரசாங்கம் தான். இதனை யாராலும் எந்தக் காரணம் கொண்டும் மறுக்க முடியாது. பிரச்சினைகது ஒரே தீர்வு ஜனாதிபதித் தேர்தலுக்குச செல்வதாகும. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இப்போதிருந்தே தயாராகி வருகிறது.

### *புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண*

இனவாதிகளின் மாபெரும் தோல்வி ஜே.வி.பி விலகியதால் அரசாங்கம் பலவீனமடைந்துள்ளது. இனவாதிகளுக்கு கிட்டிய மாபெரும் தோல்வியாகவே இதனை நான் கருதுகிறேன். அதேபோல இடதுசாரி இயக்கங்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இதன் மூலம் மாபெரும் பலம் கிட்டுகிறது.

அரசாங்கத்தினுள்ளே இருந்து முன்னோக்கிச் செலலவே ஜே.வி.பி திட்டமிட்டிருந்தது. தற்போது அவை அனைத்தும் சிதறிப்போய் உள்ளன. அத்துடன், இவர்களின் வெளியேற்றத்தால் நாட்டிலுள்ள பெரும்பாலானவர்களின் ஆதரவு இடதுசாரிகளுக்கு கிடைக்கும் எனபது எனது கருத்து. எதிர்க்கட்சி ஜனாதிபதித் தேர்தல் வரை எதிர்க்கட்சியிலேயே இருக்கும்.

### *லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன்*

ஜனாதிப்தியின் நிலைப்பாடு பலம்வாய்ந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே தேசியப்பிரச்சினை தொடர்பாக எதிரெதிர் கருத்துக்களே உள்ளன என நான் ஆரம்பத்திலேயே தெரிவித்தேன்.

இப்படி முரண்பாடுகளுடன் எவ்வாறு கூட்டமைப்பை ஏற்படுத்துவது என நான் ஜனாதிபதியிடம் கேட்டபோதிலும் அவர் அதுபற்றி எங்களுக்குப் போதிய விளககங்களைத் தரவில்லை. அதனால் தான் லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்துடன் இணையவிலலை. அவ்வாறான நிலையில் எம்மால் அரசாங்கதத்துடன் இணைய முடியாதுதானே.

இப்படியான நேரத்தில் இப்படியான முரண்பாடுகள் ஏற்படும் என நாம் அறிவோம். அது இயற்கையானது. எனினும், ஜனாதிபதியின் நிலைப்பாடு பலம்வாய்ந்தது. அதற்கு எமது கட்சி கௌரவமளிக்கிறது.

ஜே.வி.பி விலகியதால் நாட்டினுள் மாபெரும் புரட்சி ஏற்படப்போவதில்லை. எனினும் ஜனாதிபதியின் எதிர்காலத் செயற்பாடுகளைப் பொறுத்தே எதுவும் தீர்மானமாகும்.

பாராளுமன்றத்தினுள் அரசாங்கத்தின் ஏனைய செயற்பாடுகளுக்கெதிராக ஜே.வி.பி வாக்களிப்பது அவ்வளவு எளிதாக அமையாது.

### *ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராஜா கொள்ளுரே*

ஜே.வி.பி வெளியேற்றத்தினால் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு சந்தர்ப்பம் உருவாகும். பொதுக் கட்டமைப்பைக் காரணம் காட்டி ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறியமை கவலைக்குரியது. கூட்டணி அரசாக செயற்படுகையில் சில உடன்பாடுகளை மேற்கொண்டாக வேண்டும்.

கூட்டணி அரசு என்பது ஒரு கட்சியின் அரசன்று. அதனால் இவ்வாறான விடயங்களில் ஜே.வி.பி மிக ஆழமாக சிந்தித்து செயற்பட்டிருக்கலாம். ஜே.வி.பியின் வெளியேற்றம் நாட்டின் அரசியலில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சுனாமி நிவாரண சபையை ஏற்படுத்துவதன் மூலம் விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்க வழிவகைகள் ஏற்படக்கூடும். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் சமாதானத்தை ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும். அதனால் ஜனாதிபதியின் முடிவு நாட்டுக்கு நன்மையளிப்பதாகவே அமையவேண்டும்.

(ந-4)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## பொட்டிட்டு, பூமாலை சூடி வழக்காடும் பெண் சட்டத்தரணி

விசாரணை நடைபெறும் நீதிமன்றத்தின் கதவை, செய்தியாளர் தங்கராஜ திறந்தபோது என்னை அறியாமல் எனக்குள் ஓர் அமைதி ஏற்பட்டது. இந்த அமைதிக்குத்தான் பயம் என்று பெயரா? என்பது எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தமட்டில் அதனை அமைதி என்று கூறவே விரும்புகின்றேன்.

அமைதிச் சூழ் நிலை நிலவ, விசாரணை நடைபெறும் இடத்தில், பார்வையாளர்கள் இருக்கின்ற ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். முன்னதாகவே செய்தியாளர் தங்கராஜ் ஆசனத்தில் இருந்தார்.

இரண்டு மூன்று நிமிடங்கள் கூட ஆகவில்லை. அவர் எழுந்துவிட்டார். நீதிபதிகள் அமருகின்ற ஆசனங்களுக்கு முன்பாக - சட்டத்தரணிகள் கூடியிருக்கின்ற இடத்திற்குச் சென்றுவிட்டார்.

நாங்கள் இருந்த இடத்திற்கும், சட்டத்திரணிகள் அமர்ந்திருக்கின்ற இடத்திற்குமிடையே சுமார் 15 அடி தூரமே இருக்கும்.

அப்போது தான் செய்தியாளர் தங்கராஜின் மதிநுட்பம் எனக்கு விளங்கியது. நீதிமன்றத்திற்குள் கதைப்பது முறையல்ல. அதனால் பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் இருக்குமாறு என்னிடம் கூறுவதில் மொழிப்பிரயோகம் சாத்தியப்படவில்லை.

அதனால் தானே ஆசனத்தில் அமர்ந்து எனக்கு உணர்த்தி விட்டுத் தான் எழுந்தார் என்பதை ஊகித்துக் கொண்டேன்.

ஞானதீட்சை பெற்ற சிஷ்யன், குருவின் நயன பார்வை வழி செயற்பட்டது போல நான் ஆசனத்திலேயே இருந்து கொண்டேன்.

சட்டத்தரணிகள் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள். திரு. தங்கராஜ் சட்டத்தரணிகளோடு மெதுவாகப் பேசிக்கொண்டார். அந்தப் பேச்சு அன்றைய தினம் நடைபெறவிருக்கும் விசாரணை பற்றியதாகவே இருந்திருக்குமென நான் ஊகித்துக்கொண்டேன்.

### நீதிபதிகள் வருகை

நீதிமன்றத்தில் இருந்த எல்லோரும் எழுந்துகொள்கிறார்கள். ஊரோடு ஒத்தோடு என்பதற்கமைய நானும் எழுந்து நின்றேன். அரண்மனைச் சேவகர் போன்ற கோலத்தில் ஒருவர்வர, அவருக்குப் பின்னால உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவர் வந்தனர்.

ஏற்கனவே தயாராக இருந்த நீதிபதிகளின் ஆசனங்களை மேலும் ஒரு முறை சீர்செய்வது போல அந்தச் சேவகர் நடந்துகொண்டார்.

நீதிபதிகளை வரவேற்று அமருங்கள் என்பது போல அவரின் நடவடிக்கை இருந்தது.

மன்றுக்கு வந்த நீதிபதிகள் இருவரும் சபையை நோக்கி இருகரங்களையும் கூப்பி வணக்கம் செலுத்தி விட்டு தத்தம் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

அவர்கள் அமர்ந்துகொண்டதை அடுத்து சட்டத்தரணிகளும், பார்வையாளர்களும் அமர்ந்தார்கள்.

நீதிபதிகள் இருவரினதும் முகங்கள், கதிரொளிபட்ட தங்கத் தகடுகள் போல ஒளிபாய்ச்சின. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்று இதைத் தான் சொல்வார்களோ!

நீதிபதிகளின் சாந்தமான - சிரித்த முகங்கள் இப்படியல்லவா?... இருக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டை என்னுள் ஏற்படுத்தியது.

மன்றில் கூடியிருந்த பெண் சட்டத்தரணிகள் தலையில் மல்லிகைப் பூச் சூடி, நெற்றியில் குங்குமத்திலகமிட்டு, கழுத்தில் தம் மணாளனை நெஞ்சிருத்தும் தாலி தாங்கும் மஞ்சள் கயிறு கட்டி, காட்சி தந்தனர். தமிழ் அணங்கின் பண்பாட்டுக்கோலம் அது.

ஆண்சட்டத்தரணிகள் நெற்றியில் குங்குமத்திலகம் அணிந்து காட்சி தந்தனர். என்னே அழகு. உச்சநீதிமன்றில் தமிழ்க்கோலம் தவழும் காட்சி கண்டு பூரித்துப் போனேன். என்னுள் ஏற்பட்ட அந்தப் பூரிப்பு, என் தாயாக மண்ணின் நினைப்பை ஈர்த்துக் கொண்டது.

### வேறுபட்ட முகாமை

யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் நான் கண்ட மிகப்பெரிய வேறுபாடொன்று உண்டு.



உயர் நீதிமன்றத்தின் அகலத்தோற்றம்

படம்:ப.இராஜேஸ்வரன்

அங்கு இருக்கின்ற, அரச அதிகாரிகள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் அனைவருமே சாந்தமான தோற்றத்தைத் தமது நிர்வாக முகாமைத்துவத்திற்காக ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

கோபத்தோடு - சினத்தோடு எந்த அதிகாரியுமே வேலை செய்யமாட்டார்கள். அங்கு நல்ல அதிகாரி என்பதற்கு வரைவிலக்கணம் உண்டு.

எந்த அதிகாரி, மக்களின் குறைபாட்டை அமைதியோடு கேட்டு அவர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கின்றாரோ அவரே நல்ல அதிகாரி என்ற பெயரைப் பெற்றுக் கொள்வார்.

கோபத்தோடு - பதகழிப்போடு - வீட்டுக் குழப்பங்களை அலுவலகத்திற்குக் கொண்டு வந்து கொட்டி - குலைத்து - பாய்ந்து - சில நேரங்களில் கடித்து குப்பைத் தனம் புரியும் யாரையுமே அவர்கள் அதிகாரி என்ற கதிரையில் அமர்த்துவதில்லை.

ஆனால் நமது யாழ்ப்பாண மண்ணில் நிலைமை வேறு. இங்கு நல்ல அதிகாரி என்றால் அவர் ஊழியர்களோடு கதைக்கக்கூடாது - சிரிக்கக் கூடாது. அவ்வவ் போது சீறிப் படமெடுத்துக் கொத்தி - நஞ்சைக் கக்கினால் தான் அவரை சிறந்த - நிர்வாகத் திறன்மிக்க அதிகாரி என்று கூறுவோம்.

இந்த வரைவிலக்கணத்தை நமது அதிகாரிகளும் நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள் போலும், அதனால் பதவிக்கு வந்ததும் நம் அதிகாரிகள் முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டு அதட்டலில் இறங்கி விடுகின்றனர்.

இதன் காரணமாக ஊழியர்கள் அதிகாரிகளுடன் பேசவே முடியாத பரிதாப நிலை உருவாகின்றது. முகாமைத்துவமென்பது, அதிகாரிகளிடமிருந்து ஊழி

**என்.விஜயன்**

யர்களுக்கும், ஊழியர்களிடமிருந்து அதிகாரிகளுக்கும் கருத்துக்கள் பரிமாற்றப் படுகின்றபோதே திறமை பெறுகின்றது.

இந் நிலைமையை தமிழகத்தில் கண்ணுற்ற போது புளங்காகிதமடைந்தேன். இவை நெஞ்சத்து நெருடலோடு உணர்ச்சியின் மேலெழுகையால், கூறப்பட்டவை.

### விசாரணை ஆரம்பம்

நீதிபதியின் வருகையோடு, விசாரணை ஆரம்பமானது. பெண் சட்டத்தரணியொருவர். தனது விளக்கத்தை நீதிபதிகளிடம் முன்வைத்தார். அன்று நடந்த விசாரணை வித்தியாசமானதும், காலத்திற்குத் தேவையானதுமாகும்.

(வளரும்)

## 2007இல் பாடசாலைப் பாடத்திட்டங்களை மறுசீரமைக்க கல்வி அமைச்சு தீர்மானம்

2007 ஆம் ஆண்டு முதல் பாடசாலைப் பாடத்திட்டங்களை மாற்றியமைக்க கல்வியமைச்சுத் தீர்மானித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி மறுசீரமைப்புக் கொள்கையின் கீழ் 8 ஆண்டுகளின் பின்னரே இவ்வாறு மறுசீரமைக்கப் படவுள்ளன. இந்தப் புதிய திருத்தங்களின் அடிப்படையிலேயே 1 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரையான பாடத்திட்டத்தில் மாற்றம செய்யப்பட்டு சிங்கள மொழி மூல மாணவர்களுக்குத் தமிழ் மொழியும், தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு சிங்கள மொழியும் போதிக்கப்படவுள்ளது. இதேவேளை. ஆங்கில மொழி மூலம் கட்டாய மாக்கப்படவுள்ளது. இதற்கு மேலதிகமாக கணனி, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் என்பன ஆரம்பக் கல்விப் பாடத்திட்டங்களில சேர்த்துக் கொள்ளப் படவுள்ளன.2007 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும் புதிய மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் 6 ஆம் ஆண்டு முதல் 9ஆம் ஆண்டு வரையான மாணவர்களுக்கு வாழ்க்கை நிபுணத்து வம் எனும் விசேட பாடம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பாடத்திட்டத்தில் 10 ஆம் 11 ஆம ஆண்டு மாணவர்களுக்கு பூகோள விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகியன 33 ஆண்டுகளின் பின்னர் சேர்த்துக் கொள்ளபடுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தப் பாடங்களை ஆங்கிய மொழிமூலமாக கற்க விரும்பும் மாணவர்களுக்கு சந்தர்பம் வழங் கப்படவுள்ளது. 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் புதிய பாடத்திட்டத்தின்படி உயர்தரத்திலும் ஆங்கிலம் கட்டாயமாக்கப்படவுள்ளது.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பாடசாலைப் பாடத்திட்டங்கள் குறித்துக் கவனம் செலுத்திய பின்னரே இந்தப் புதிய பாடத்திட்ட மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர்

## மறைந்தார் மாண்பு

## செம்பியன்செல்வன்



நாட்டுப்பற்றாளர், மூதறிஞர் க.சொக்கலிங்கம் அவர்களின் 'கடல்' சிறு கதைத் தொகுதி நூலுக்கு எழுதிய முன்னுரையில் ஆற்றல் மிக்க மூத்த எழுத்தாளர் நந்தி அவர்கள் மூன்று காலகட்ட முன்னோடி எழுத்தாளர்கள் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

'சொக்கன் பழைய எழுத்தாளர். சோ.சிவபாத சுந்தரம், சம்பந்தன், இலங்கையர்கோன், சு.வே., வரதர், கனக. செந்திநாதன் வரிசையில் இடம் பெற்றவர். பின்பு பொன்னுத்துரை, டானியல், டொமினிக் ஜீவா சந்தியோடு ஒன்றானவர். அதைத் தொடர்ந்து செ.யோகநாதன், பெனடிக்ற் பாலன், செங்கை ஆழியான், செம்பியன்செல்வன் காலத்தில் அவர்களுடன் நின்றவர்'.

1947 இல் எழுத் தொடங்கி 1940 கள், 50கள், 60களில் இவர்களுடன் இன்று வரை புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கிக் கடந்த மாதம் அமரராகிவிட்ட நந்தி ஐயா தம்முடைய பெயரைச் சேர்க்காமல் விட்டிலும் அவர்கள் பெயரும் இதில் சிறப்பிடம் பெறுவதாகும்.

நந்தி ஐயா குறிப்பிட்ட புகழ்பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரான செம்பியன் செல்வன் (ஆறுமுகம் இராஜகோபால் - 01.01.1943 - 20.05.2005) அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த பல்துறை எழுத்தாளராக விளங்கினார். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்கத் தொடங்கி, பின் யாழ். இந்துக் கல்லூரியில் கற்று, பல்கலைக் கழகம் சென்று புவியியல் சிறப்புப் பட்டம் பெற்ற செம்பியன் செல்வன் ஆசிரியராகவும் அதிபராகவும் துணைக் கல்விப் பணிப்பாளராகவும் விளங்கி ஓய்வுபெற்றார்.

மிக இளமையிலேயே அன்னையை இழந்த செம்பியன்செல்வன் பாட்டியால் வளர்க்கப்பட்டு இளமையிலேயே வாசிப்பு ஆர்வலர் ஆக்கப்பட்டார். இவர் யாழ். இந்துக் கல்லூரியிலே கற்கத் தொடங்கிய காலத்தில் அவரது அண்ணா கனேச பிள்ளை 'செங்கதிர்' என்ற கையெழுத்து ஏட்டை மாதந்தோறும் வெளியிட்டு வந்தார். இவ்விதழின் பாலர் பகுதியில்

செம்பியன்செல்வன் இளமையிலே எழுத்தாளராக மலர்ந்தார். 'சி.ஐ.டி. சிங்காரம்' என்ற சின்னஞ்சிறு முதல் நாவலைச் செங்கதிர் இதழில் எழுதினார். எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள ஆசிரியர் பலர் யாழ். இந்துக் கல்லூரியில் கற்பித்ததால் பல மாணவர்கள் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக உருவாகினர். கவிஞர் சோ.பத்மநாதன், செங்கையாழியான், செம்பியன்செல்வன் முதலியோர் சமகால எழுத்தாள மாணவராவர். செம்பியன் செல்வனும் செங்கை ஆழியானும் அக்காலம் முதல் இன்றுவரை இரட்டையர்களாக விளங்கி இணைந்து செயற்பட்டனர்.

1960 இல் ஆங்கிலம் கல்வி மொழி என்ற நிலையிலிருந்து மறைந்து தமிழ் கல்வி மொழியானது. இந்நிலைப் பல்கலைக் கழகத்திலும் தொடங்கியது. இதனால் இவ்வாண்டில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்கத் தொடங்கிய மாணவர் பலர் புகழ்பெற்ற எழுத்தாளராகினர். இவர்கள் அக்காலத்தில் கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டனர். இத்தொகுப்புக்கள் வெளிவரப் பெரும் பணியாற்றியவர்களுள் செம்பியன் செல்வனும் ஒருவராவர்.

1960களில் யாழ்ப்பாணத்தில் இலக்கியக் கூட்டங்கள் பெருமளவில் நடைபெறத் தொடங்கியது. இக் கூட்டங்களில் செம்பியன் செல்வனையும் செங்கை ஆழியானையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இவர்கள் பல்கலைக்கழகக் கல்வி தொடங்கிய காலத்தில் நான் வவுனியாவில் கற்பிக்கத் தொடங்கினேன். இக்காலத்தில் புகைவண்டியில் செல்லும் போது இருவரையும் சந்திக்கும் வாய்ப்பும் நீண்டநேரம் கலந்துரையாடும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

1980களில் யாழ். இந்துக் கல்லூரியில் நல்லூர் கல்விவள நிலைய அலுவலகத்தில் பணியாற்றிய போது அங்கு கற்பித்த அவருடன் நாள் தோறும் கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. கல்விவள நிலையச் சார்பில் நல்லூர் பாடசாலைகளில் மாணவருக்கு நடத்திய சிறுகதைக் கருத்தரங்குகளில் செம்பியன் செல்வனும் செங்கையாழியானும் கலந்து உரையாற்றி மாணவர் மனதில் நவீன இலக்கிய வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்தினர்.

பல்கலைக் கழகம் செல்லும் வரை ஆங்கிலமொழி மூலம் கற்ற செம்பியன் செல்வன் ஆங்கில இலக்கிய நூல்களையும் கற்பதில் தீவிரமாக ஈடுபட்டார். சிறுகதை, நவீனம் (நாவல்) ஆங்கிலம் ஊடாகத் தமிழில் புகுந்தாலும் அவையும் தனித் தமிழ் இலக்கியங்களாக உயர்ந்தன. சிறுகதையின் இவ்வுருவாக்கம் பற்றிச் செம்பியன் செல்வன் பின்வருமாறு விளக்குகின்றார்.

'சிறுகதை என்னும் கலை வடிவமும் அது வாசகர்களுக்கு வழங்கும் அநுபவங்களும் தமிழிற்குப் புத்தம் புதியன. சிறுகதை நோபட்டினால் வருகையால் தமிழ் உள்வாங்கிக் கொண்ட இலக்கிய உரு. தமிழிலக்கிய மண்ணில் விழுந்த சிறுகதை என்னும் புதிய வித்து, தமிழின் தன்மைக்கேற்ற கரு, உரி கொண்டதாக முளைவிட்டெழுந்தது'.

'சொக்கனின்சிறுகதைகள்', சொக்கன்-60 மணிவிழா மலர், 1990 ப.13 செம்பியன் செல்வன் இம்மலர் ஆசிரியர்களுள் ஒருவராகவும் பணியாற்றினார்.

சிறுகதைத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட செம்பியன் செல்வன் எழுதிய முதலாவது சிறுகதையான இதயக் குமுறல் புகழ்பெற்ற எழுத்தாளரான சிற்பி. சிவசரவணபவன் அவர்கள் வெளியிட்ட கலைச்செல்வி இதழில் வெளிவந்தது. கலைச்செல்விச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசுபெற்று, அவர் மிக அதிக அளவில் பல இதழ்களில் சிறுகதைகளையே எழுதி வந்தார். 1967 ஆம் ஆண்டு இவரது முன்னோடிச் சிறுகதைகள் 'அமைதியின் இறுகுகள்' என்ற நூலாக வெளிவந்தது. இவரது சிறுகதைகள் தமிழீழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் பெருமை பெற்றது. இச் சிறுகதைத் தொகுதிக்கு தமிழகப்பல்கலைக்கழகப் பேராசிரியர் சாலை. இளந்திரையன் விமர்சனம் எழுதினார். இத்தொகுதியின் சிறப்புப்பற்றியும் செம்பியன் செல்வனின் சிறுகதைத்துறை ஆற்றல் பற்றியும் பேராசிரியர் விமர்சன உரையில் பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றார்.

'ஈழத்து இலக்கியத்துறையில் ஏற்பட்ட குழம்பிய நிலையைத் தெளிவித்து விடிவின் சுடர்களாக விளங்குபவர்களில் செம்பியன் செல்வன் ஒருவராவர். 'அமைதியின் இறகுகள்' சிறுகதைத் தொகுதியில் 'உணர்ச்சிக்கு அப்பால்', 'நெல்', 'அமைதியின் இறகுகள்' என்பன மிகவும் வெற்றிபெற்ற சிறுகதைகள். 'நீரும் நிலமும்' எனக்கு மிகவும் பிடித்தமான கதை... செம்பியன் செல்வன் ஈழத்துச் சிறுகதை உலகிற்குக் கிடைத்துள்ள ஒரு புதிய இளையசொத்து என்பதில் ஐயமில்லை'

சுதந்திரன், 30.12.1967

1962 முதல் 1995 வரை செம்பியன் செல்வன் எழுதிய இருபத்து மூன்று சிறுகதைகளின் தொகுப்பாக 2002இல் யாழ். இலக்கிய வட்டம் 'சர்ப்பக வியூகம்' என்ற நூலை வெளியிட்டுள்ளது. ஈழநாடு, சுதந்திரன், வீரகேசரி, மல்லிகை, தினகரன், குங்குமம், ஈழமுரசு, வெளிச்சம், பாரிஸ் ஈழமுரசு, நான் ஆகிய இதழ்களில் இச்சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

சிறுகதைகளை மட்டுமன்றி, குறுங்கதை, உருவகக் கதை என்ற இருவகைச் சின்னஞ்சிறு கதைகளையும் செம்பியன் செல்வன் தொடர்ந்து எழுதிப் புகழ்பெற்றார். 'குறுங்கதைகள் நூறு' என்ற குறுங்கதை நூல் தரமாகவும் நிறைவாகவும் அமைந்ததால் பலராலும் வீதந்துரைக்கப்பட்ட படைப்புக்களைக் கொண்டது. 'யதார்த்த நடை முறை முரண்பாடுகளைக் குத்திக் காட்டி சங்க கால இலக்கியப் படைப்புக்களைப் போல இறுக்கமும் ஆக்கமும் கொண்டு கருத்தும் கற்பனையும் இறுகிக் கலைப் படைப்பாகியுள்ள குறுங்கதைகள்' என்று இவை பாராட்டப்பட்டுள்ளன.

மூத்த எழுத்தாளர்களான சு.வே., எஸ்.பொன்னுத்துரை, ரஹ்மான் ஆகியோரைத் தொடர்ந்து உருவகக் கதைத் துறையில் சிறப்பான பணியாற்றியவர் செம்பியன் செல்வன். ஐம்பது உருவகக் கதைகளை நூலாக வெளியிட்ட போதிலும் அவை முற்றாகவே இடப்பெயர்வுக் காலத்தில் அழிக்கப்பட்டமை பேரிழப்பாகும்.

மிக இளமைக் காலத்திலேயே அண்ணாவின் கையெழுத்து இதழில் சின்னஞ்சிறு நாவலை எழுதிய செம்பியன் செல்வன் பின் 'கானகத்தின் கானம்', 'நெருப்பு மல்லிகை', 'விடியலைத் தேடும் வெண்புறா' ஆகிய மூன்று நீண்ட நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 'கானகத்தின் கானம்' மீரப்பதிப்பக வெளியீடாக வந்தது. வீரகேசரி நடத்திய யாழ்ப்பாணப் பிரதேச நாவல்போட்டியில் முதல்பரிசுபெற்ற 'நெருப்பு மல்லிகை' நாவல், இலங்கைப் பிரதேசப் போட்டியிலும் முதல் பரிசைப்பெற்று உயர் புகழ்தந்தது. இது வீரகேசரிப் பிரசுர நூலாக வெளிவந்தது. 'விடியலைத் தேடும் வெண்புறா' என்ற நாவல்ஈழமுரசு இதழில்வெளிவந்தது. பின் 300 பக்கங்கள் கொண்ட நூலாகவும்அச்சிடப்பட்டது. இந்நூலும் உருவகக் கதைகளை நூல்போல இடப்பெயர்வுக் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டதும் பேரிழப்பாகும்.

ஓரங்க நாடகம், முழு நீள நாடகம் ஆகிய இரு நாடகத் துறை எழுத்தாளராகவும் செம்பியன் செல்வன் விளங்கினார். கலைக்கழகம் நடத்திய நாடக எழுத்துப் போட்டிகளில் நான்கு முதற்பரிசுகளைப் பெற்றார். 1965 இல் 'இந்திரஜித்' என்ற நாடகம் எழுதி இரண்டாம் பரிசு பெற்ற அவர் 1966 இல் 'சின்ன மீன்கள்' 1968 இல் 'எரியும் பிரச்சினைகள்' 1969 இல் இருளில் எழும் பெருமூச்சு' ஆகிய நாடகங்களை எழுதி முதற்பரிசுகள் பெற்றார். ஈழநாடு இதழ் 10 ஆம் ஆண்டு நிறைவினை யொட்டி நடத்திய ஓரங்க நாடகப் போட்டியிலும் 'விடிய இன்னும் நேரம் இருக்கு' என்ற நாடகத்திற்கும் செம்பியன்செல்வன் முதற்பரிசு பெற்றார். இப்போட்டியில் 2ஆம், 3ஆம் பரிசுகள் வழங்கத் தரமான நாடகங்கள் இல்லாமையால், ஏனைய நாடகங்களுக்கு ஆறுதல் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பரிசு பெற்ற நாடகங்கள் ஈழநாடு இதழினரால் 'விடிய இன்னும் நேரமிருக்கு' என்ற நூலாக வெளியிடப்பட்டன. இதே பத்தாம் ஆண்டுச் சிறுகதைப் போட்டியில் செம்பியன் செல்வனும் செங்கை ஆழியானும் இணைந்து முதற்பரிசு பெற்றனர்.

இவற்றைவிட செம்பியன் செல்வன் எழுதிய 'மூன்று முழு நிலவுகள்' என்ற முழு நீள நாடகம் நூலாக வெளியிடப்பட்டது. இந் நாடகச் சிறப்பைச் செங்கை ஆழியான் பின்வருமாறு போற்றுகின்றார்.

'அழகிய உரையாடல், நாடகத்தினை நடத்திச் செல்லும் இலாகவம், சம்பவ கோவைகளிடையே ஏற்படுத்தும் மறை கவர்ச்சிப் பண்புகள், தத்தவ விசாரங்கள் என்பன' 'மூன்று முழு நிலவுகள்' நாடகத்தை இலக்கிய காவியம் ஆக்கு கிறது இதன் சிறப்பைப் போராசிரியர் சு.வித்தியானந்தன் இவ்வாறு போற்றுகின்றார்.

'அரு இராமநாதனின் 'ஆசோகனின் காதலி' எஸ்.பொன்னுத்துரையின் 'சதுரங்கம்' நாடக வரிசையில் செம்பியனின் 'மூன்று முழு நிலவுகள்' நாடகம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. மேடைக்கும் வாசினைக்கும ஒப்பவே உயிரூட்டும் உரைநடையும் நாடகமறைக் கவர்ச்சியும் கொண்ட நல்ல நாடகம்'.

நாடகத்துறையில் செம்பியன் செல்வன் கொண்டிருந்த ஈடுபாடும் ஆற்றலும் காரணமாக இவர் 1977 முதல் 1983 வரை இலங்கைக் கலாசாரப் பேரவையின் நாடக மதிப்புரைக்குழுச் செயலராகவும் பணியாற்றியுள்ளார். கலாசார அமைச்சின் நாடக மதிப்புரைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார்.

நாடகத்துறையில் மட்டுமன்றித் திரைப்படத்துறையிலும் ஆர்வம் கொண்ட செம்பியன் செல்வன் செங்கை ஆழியான் வேண்டுகோட்படி அவரது 'வாடைக் காற்று' நாவலைத் திரைக்கதையாக்கி அதற்கேற்ற உரையாடலையும் எழுதிக் கொடுத்தார். இவ்வுரை நடைச் சிறப்புக் கருதி திரைப்படக் கூட்டுத்தாபனம் இத் திரைப்படத்துக்கு மானியமும் வழங்கியது.

'நானிலின் கீதை' என்ற தத்துவ நூலையும் 'ஈழத்து தமிழ்ச் சிறுகதை மணிகள்' என்ற விமர்சன நூலையும் செம்பியன் செல்வன் வெளியிட்டார். வீவேகி ஏட்டில் இரண்டாவது நூல் தொடர்ந்து வெளிவந்த போது அதனைப் படித்த தமிழக அறிஞர் வல்லிக்கண்ணன், '(இது) பயனுள்ள இலக்கிய விமர்சன முயற்சி ஈழத்தில் விமர்சன இலக்கியம் புதிய நோக்கில் வளர்ந்து வருகிறது என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு உங்கள் முயற்சி' என்று பாராட்டியுள்ளார்.

செம்பியன் செல்வன் இராஜபிரியன் முதலிய புனைபெயர்களில் புதுக்கவிதைத்துறை எழுத்தாளராகவும் விளங்கினார். புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கிய செம்பியன் செல்வன் பல இதழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். ஈழத்தில் நீண்டகாலம் பயனுள்ள இதழாக எம். வீ.ஆசீர்வாதம் அவர்கள் 'விவேகி' இதழை வெளியிட்டுவந்தார். 1968 முதல் 1971 வரை செம்பியன் செல்வனும் செங்கை ஆழியானும் இதன் இணை ஆசிரியராகப் பணியாற்றி இதனை மேலும் சிறப்பிதழ் ஆக்கினர். யாழ்ப்பாணத்தில் வெளியான 'ஈழமுரசு', நாளிதழ் 'செந்திக் கங்கை' 'அமிர்தகங்கை' ஆகிய இதழ்களையும் வெளியிட்டார். செம்பியன் செல்வன் 1985, 1986 இல் அமிர்த கங்கை இதழின் கௌரவ ஆசிரியராகச் செயற்பட்டுப் பன்னிரு இதழ்களை வெளியிட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் டிப்ளோமாப் பட்டப்படிப்புக் காலத்தில் இவர் 'கலைஞானம்' இதழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1965 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து யாழ். இலக்கிய வட்ட உறுப்பினராக இருந்த செம்பியன் செல்வன் 1966 இல் செயலர் யாழ்வாணனுடன் இணைந்து 'இலக்கியம்' என்ற மலரை வெளியிட்டார். 'அதன் செய்திமடல்' ஆசிரியராகவும் செம்பியன்செல்வன் பணியாற்றினார்.

மயிலங்கூடலூர் பி.நடராசன்

செங்கை ஆழியானுடன் இணைந்து 'புவியியல்' 'நுண்ணறிவியல்' ஆசிரியராகவும் செம்பியன்செல்வன் பணியாற்றினார்.

1950 முதல் ஈழத் தமிழர் தமிழத்தேசியப் பற்றாளராகவும் 1970 முதல் தமிழீழத் தேசியப் பற்றாளராகவும் அமைவது வரலாறு. நாட்டுப் பற்றாளர் செம்பியன் செல்வன் அவர்களும் தமது இலக்கியங்கள் மூலம் தமிழ் மக்களின் இக்கோட்பாடுகளை விளக்குபவராக விளங்கினார்கள். நாட்டுப் பற்றாளர் செம்பியன் செல்வனின் சிறுகதைகளும் நாவல்களும் சமகாலப் பிரச்சினைகளையும் சமூகக் களத்தின் எரியும் பிரச்சினைகளையும் விளக்குகின்றன. அவர் அமரராவதற்கு ஒருவாரத்துக்கு முன் இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியுரையில் இதனைப் பின் வருமாறு விளக்குகின்றார்.

'யதார்த்த பு,ர்வமான மண்ணோடினைந்த தமிழீழத் தேசியத்தை நேசித்த மக்களிலக்கியப் படைப்புக்கள் சூழலியலுடன் ஒன்றிக்கின்றன... வாழும் மக்களின் முக்கிய பிரச்சினைகளிற்கு அழுத்தம் கொடுத்து வரையப்படும் எந்தவொரு இலக்கியமும் மக்களிலக்கியங்களாகும். மக்களிற்காக, மக்களின் நலன் கருதி மக்களில் ஒருவனாக வாழும் கலைஞர் ஒருவரால் பிறப்பிக்கப்படும் எந்த இலக்கியமும் மக்கள் இலக்கியமாகும்'

நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வன் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடம்பெறுவார் என்பதற்கு அவரது ஆக்கங்கள் சான்றாக அமைகின்றன. □

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ-திருநாவுக்கரசு 27

சில மாதங்கள் நீடித்த இந்நிலைமையால் பல தமிழர் தலைவர்கள் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டனர். இன்று வரையிலான இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்ட வெகுசனப் போராட்டம் அச் சத்தியாக்கிரகப் போராட்டமேயாகும்.

இதைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த திரு.டட்லி சேனநாயக்காவினது அரசாங்கத்துடன் தமிழரசுக் கட்சியானது இணைந்ததும் தமிழரசுக் கட்சியின் மூதவை உறுப்பினரான எம். திருச்செல்வம் அவர்கள் அத்தேசிய அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சர் பதவியேற்றதும் மாவட்ட சபைகளை அமைக்கும் டட்லி-செல்வா ஒப்பந்தப் பிரகாரம் அரசாங்கம் எடுத்த முயற்சிகளுக்கு ஐ.தே கட்சிக்குள்ளும் வெளியிலும் ஏற்பட்ட எதிர்ப்புகளினால் அத்திட்டம் கைவிடப்பட்டதும் 1958ஆம் ஆண்டைய ‘‘தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள்” மசோதாவுக்கு 1966இல் விதிகளையுருவாக்கியதும் அதற்கெதிரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் அதனது கூட்டாளிகளான இடதுசாரிகளினதும் தமிழர் எதிர்ப்புக் கோஷங்களும் நடவடிக்கைகளும் அரசியல் வரலாற்று நிகழ்வுகளும் கசப்பான அனுபவங்களுமாகும். இறுதியாகத் திருகோணமலை பிரடெரிக் கோட்டையின் கோணேசர் ஆலயப் புனித நகர் விவகாரத்துடன் தமிழரசுக் கட்சியின் ஐ.தே.க. அரசாங்கத்துடனான நல்லுறவு கெட்டு, அமைச்சர் பதவியிலிருந்து திருச்செல்வம் பதவி விலகவும் நேர்ந்தது. 1968இல் இது நிகழ்ந்த போதிலும் 1970இல் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் தமிழர்களின் பெரும்பான்மைக் கட்சியாகத் தமிழரசுக் கட்சியே தேர்ந்தெடுக்கப்பட்டது.

எனினும் அதனது செல்வாக்கு வீதம் கேள்விக்குரிய விதத்தில் சரிவடையத் தொடங்கியதும் குறிப்பிடத்தக்கது.

தாங்கள் பின்பற்றி வந்த இனசமத்துவக் கொள்கையை மாற்றி, வகுப்புவாதத்தினுள் இடது சாரி அரசியல்வாதிகள் சரண்புகுந்தமையும் ஏனைய சிங்கள இனவாதக் கட்சிகளின் பேரினவாதத்தை எதிர்கொள்ளும் திறனுக்காகவும் தொடர்ச்சியான தமிழினவாதத்தை வளர்த்துவிட்ட நன்றிக்காகவும் மாற்றீடாக வேறொரு பலம் வாய்ந்த் தமிழ்த்தேசிய வாத நிறுவனம் இல்லாமையாலும், தமிழரசுக்கட்சியின் அணுகுமுறைகள் மாறுபட்ட தருணத்திலும் கூட பெரும்பான்மையான தமிழ் மக்கள் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் அதன் அரசியற் பின்னணியில் நின்றனரென்பதே பொருந்தக்கூடிய கூற்றாகும்.

1970ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கமானது, விரக்தியுற்ற சிங்கள இளைஞர் குழுவினால் தோற்றுவிக்கப்பட்ட கிளர்ச்சியை எதிர்கொண்டது. ஜே.வி.பியினரின் 1971இல் இடம்பெற்ற ஆயுதக்கிளர்ச்சி 10,000 க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்படவும், 15,000க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறைகளிலடைக்கப்படவும் கூடியதாக இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அடக்கப்பட்டது. இலங்கை அரசியற் சரித்திரத்தில் முதன் முறையாகக் கிடைத்த மூன்றிலிரண்டு பங்குப் பெரும்பான்மையைப் பயன்படுத்திப் புதிய குடியரசு யாப்பினையும் அமுலுக்குக் கொண்டு வந்தது அரசு. தமிழ்பேசும் மக்களது அபிலாஷைகளுக்கு இடமில்லாத யாப்பமைவு மன்றத்தை உதாசீனம் செய்து 28 ஜூன் 1971இல் தமிழரசுக்கட்சி வெளியேறியது. தங்கள் உணர்வுகளும் உரிமைகளும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் 1972ஜனவரியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாட்டில் முதன் முதலாக தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.இத்தருணத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான சி.கதிரவேற்பிள்ளையவர்களின் கருத்தினை நாம் நினைவு கொள்வது பொருத்தமானதானகும். தமிழர்களின் அரசியல் சுதந்திரம் பற்றி 1963இல் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணி மாநாடொன்றில் அவர் உரையாற்றியிருந்தார். அதில் சில பகுதிகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

‘‘சரித்திரமறிந்த காலம்தொட்டு இலங்கையில் தமிழ்பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் தனித்தனி அரசர்களின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளாகப் பிரிந்து வாழ்ந்திருக்கின்றனர். காலத்துக்குக் காலம் படைப்பலமுள்ள ஒரு அரசன் அயல் இராச்சியத்தின் மேல்படையெடுத்து வெற்றி கொண்டு சிறிதுகாலம் இலங்கை முழுவதையும் தன்னாட்சியின் கீழ் ஒன்றுபடுத்த முனைந்தான் ஆனால் இந்த ஒற்றுமை படையெடுப்பாலும் வெற்றியாலும் ஆட்சி வலியாலும் உண்டான ஒரு பொய்யான ஒற்றுமையேயன்றி உண்மையாக இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் கருத்திலும் உணர்ச்சியிலும் சமூக அரசியல் வாழ்விலும் ஒரு தேசிய இனமக்களாக ஒரே நாட்டு மக்களாக வாழவில்லை”.

‘‘போர்த்துக்கேயர் வந்த காலத்திலும் இலங்கைவாழ் மக்கள் மூன்று அரசர்களின் கீழ் மூன்று இராச்சியங்களில் வாழும் மக்களாகப் பிரிந்திருந்தனர். அப்போதும் இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் ஒரே தேசிய இனமக்கள் என்றும், இலங்கை ஒரு இனத்தேயமென்றும் ஒருமைப்பாட்டினை அரசியல் வாழ்வில் எய்தவில்லை”


‘‘பதினாறாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பாவில் நடந்த படையெடுப்புகள், யுத்தங்கள் காரணமாக அங்கு இனத் தேசங்கள் உருவாகினபோல், இலங்கையானது போர்த்துக்கேய- ஒல்லாந்த படையெடுப்பால் ஒரு இனத் தேயமாக உருவாகவில்லை. இனத்தேயமாவது ஒரு தேசிய இனத்துக்கு ஒரு நாடாக அமைதல், போர்த்துக்கேய-ஒல்லாந்த ஆங்கிலேயப் படையெடுப்பை இலங்கை மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு எதிர்க்கவில்லை. அப்போதும் இலங்கையின் மூன்று அரசர்களின் கீழ் மூன்று இராச்சியங்கள் இயங்கின. ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்பும்,கடைசியாகக் கண்டிஇராச்சியம் அவர்கள் கைக்குட்பட்ட பின்பும் இத்தேசிய ஒருமைப்பாடு சாதாரண மக்களிடம் உண்டாகவில்லை.ஆங்கில ஆட்சியின் இறுதி ஐம்பது வருடங்களுக்குள் தான் இங்கு ஆங்கிலம் படித்த சிங்கள- தமிழ்த் தலைவர்கள் தங்களை இலங்கையர் என்ற ஒரு தேசிய இனக் கருத்திலும் உணர்ச்சியிலும் கொண்டு, ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றுச் சுதந்திர நாடாகத் திகழ வேண்டுமென்று நினைத்தனர். அதற்காகவும் உழைத்தனர். ஆனால் இப்படி இலங்கையர் என்ற தேசிய இன ரீதியில் நினைத்ததும், அரசியல் நடத்தியதும் படித்த இலங்கையர்-அதாவது ஆங்கிலம் படித்த இலங்கையர் என்றவரின் கனவாகவும் இலட்சியமாகவும் இருந்தது”

மேலே காட்டப்பட்டுள்ள சொற்பொழிவின் சில பகுதிகள் தமிழர்களின் தனி நாட்டுக் கோரிக்கையின் நியாயங்களைக் கற்பிப்பதாகவே தமிழரசுக் கட்சியினர் கருதினரெனலாம். பிற்காலத்தில் ‘‘தமிழ் ஈழம்” கோரிக்கையை நாடிநின்றவர்கள் எல்லோரும் கதிரவேற்பிள்ளையின் வரலாற்று ரீதியான கருத்தை ஏற்று நின்றவர்களாகவே கொள்ளவேண்டும். *(தொடரும்)*

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

# நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

## பதின்மூன்றாம் திருவிழா



## அடியினை மாறா தருள்

தந்தருள் ஞானசாதனம் சத்தியம்
தவறிலா நெறிபொறை அறிவு
பந்தமால் எய்யாப்பக்தி பேரன்பு
பகலிரவின் அரவிந்த
அந்தமே ஜல்லா அடியினைமாறா
தருள்புணர்ந் தோங்கு நற்றியாள
சிந்தையாய் மோன தேசிகன் திருத்தாள்
சேர்ந்தருள் நாகபூசணியே

கு.மேகலா, நயினாதீவு

## நாகம்மாள் பவனி

பவனி வருகிறாள் நாகம்மாள்
பவனி வருகிறாள்
புவனம் புகழ் சிங்கம் மீதில்
பவனி வருகிறாள்
பாரினிலே அழகு நாகம்மாள்
பவனி வருகிறாள்
பக்தர்களின் குறை தீர்க்க
பவனி வருகிறாள்
மேள தாளங்கள் முழங்கிடவே
பவனி வருகிறாள்
செய்த பாவங்களைப் போக்கிடவே
பவனி வருகிறாள்
வேதியர்கள் சபை நடுவே
பவனி வருகிறாள்
நான்கு வேதங்களின் சபை நடுவே
பவனி வருகிறாள்
வேதனைகள் போக்கிடவே
பவனி வருகிறாள்
ஒற்றுமையாய் வாழ வைக்க
பவனி வருகிறாள்

சின்கந்தையா, பொன்னாவளை

## கதறிடும் அடியவர் கவலை தீரம்மா!

கஷ்டப்பட்டு கதறிடும் அடியார்
கவலைகள் தீர்க்கும் கற்பக தருவே
அம்மையே நாகம்மா! நாகம்மா அம்மையே!
அலைகடல் தாண்டி அடியவர் கூட்டம்
அம்பிகை வந்தன் அருளினில் நாட்டம்
கலிபொலி நயினைப் பதியினில் நின்றும்
கயிலை வாகனக் காட்சி கொடுக்கும்
அம்மையே நாகம்மா ! நாகம்மா அம்மையே!

நயினைப் பசிக்கவி

## “அருள் புரிவாய் அம்பிகையே”

“நாகேஸ்வரம் தனிலிருந்து நயினைநற் பதியினிலே நீ
அருள் பாலிக்கும் தாயே ஈஸ்வரியே நீ
பட்டதுயர் மாய்த்திடவே வரம் அளிப்பாய் நீ
பழம் வினைகள் களைந்திடுவாய் அம்பிகையே நீ
நாகம் குடை பிடிக்க சிவலிங்கம் மருங்கிருக்க நீ
இன்று எழில் கைலைக்காட்சி தந்திடும் புராதனி நீ
அலைகடல் தாண்டித் தஞ்சமென வந்தோர்க்கு நீ
மெய்சிலிர்க்க உளம் மகிழ்ந்திட நல்வாழ்வளிப்பாய் நீ”

நயினை விஜயன்

# சனிப் பெயர்ச்சி

**27.06.2005ஆம் திகதி சனிபகவான் மிதுன ராசியினின்று கடக ராசிக்குச் செல்கிறார். இந்த சனிப் பெயர்ச்சியால் 12 இராசிக்கும் 27 நட்சத்திரங்களுக்கும் உரிய பலன்களும் கடைப்பிடிக்க வேண்டிய பரிகாரங்களும் இங்கே தரப்படவுள்ளன.**

## மேடம்



*அழகிய கண்களைப் பெற்று எதிலும் வேகமாகவும் விவேகமாகவும் செயல் படும் மேட ராசி அன்பர்களே!*

செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்த உங்களுக்கு எதிலும் முன்கோபம் அதிகமாக இருக்கும். ஆயுள்காரகன் என வர்ணிக்கப்படும் சனி பகவான் வரும் 27.06.2005 முதல் 5.8.2007 முடிய 4ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய உள்ளார். சுகஸ்தானத்தில் சனி சஞ்சரிக்க உள்ளதால் உங்களுக்கு நிம்மதி இல்லாத சூழ்நிலை ஏற்படும். எந்த செயலும் ஒரு முறைக்கு பலமுறை கஷ்டப்பட்டு முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அர்த்தாஷ்டமச் சனிக்காலம் என்பதால் பெரிய முதலீடுகள் செய்யும்போது சற்று உஷாராக இருப்பது உத்தமம். தொழில் நிலையில்கூட பல்வேறு அனுகூல மற்ற மாற்றங்கள் உண்டாகும் சனி 4இல் சஞ்சரிக்கும் காலத்தில் ஆண்டுக்கோள் என வர்ணிக்கக்கூடிய குரு பகவான் 19.09.2005 முதல் 20.10.2006முடிய சம சப்தமஸ்தானமான 7ஆம் வீட்டில், சஞ்சரிக்க உள்ளார். குருபகவான் 7 இல் சஞ்சரிக்கும் காலத்தில் உங்களின் கையிருப்பு அதிகரிக்கும் நிலை சமுதாயத்தில் உங்களுக்குள்ள கஷ்டங்கள் விலகி நிம்மதியான சூழ்நிலை உண்டாகும். சர்பகிரகமான ராகு வாக்கிய சித்தாந்தப் படி 21.09.2006முதல் 10.04.2008 வரை லாபஸ்தானமான கும்பராசியில் சஞ்சரிக்க உள்ளார். அர்த்தாஷ்டமச்சனி என்பதால் இந்தக் காலத்தில் நீங்கள் பிறருக்கு வாக்குறுதி அளிப்பது மட்டுமின்றி கடன் சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பது உத்தமம்.

**உடல் ஆரோக்கியம்:** உங்களுக்கு அடிக்கடி வெளியூர் பயணங்கள் ஏற்பட்டு அதிகமான அலைச்சல் டென்ஷன் அதனால் அமைதியற்ற சூழ்நிலைகள் நிலவும். உடல் நலனிலும் அதிக அக்கறைசெலுத்த வேண்டும். அதிகமான மருத்துவச் செலவுகள் ஏற்படும் மனைவி வழியில் மாதவிடாய் கர்பக் கோளாறுகளும் வயிற்று உபாதைகள் புத்திரர்களின் வழியில் உண்டாகி மனதில் சஞ்சலமானநிலை ஏற்படும். வெளியூர் பயணம் சாதகமாக அமையாது.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில் தேவை இல்லாத சிக்கல்களில் சிக்கிக்கொண்டு தவித்திடநேரிடும். வாக்குறுதி கொடுத்தால் அதனை காப்பாற்றமுடியாத சூழ்நிலையால் அவமானப்படவும் நேரிடும். எடுக்கும் காரியம் யாவும் தடைப்படும். வம்பு வழக்குகள் மிகுந்த அலைச்சலை ஏற்படுத்தும். அசையாச் சொத்து வகையில் செலவுகளும் கடன் தொல்லைகளாலும் அலைச்சல் டென்ஷன் ஏற்படும்.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபார நிலையில் போராட்டமான நிலைகளும் மறைமுக போட்டிகள் நெருக்கமானவர்களே சாதகமாக அமையமாட்டார்கள் லாபம் குறையும். வேலையாட்களும் ஒத்துழைக்கமாட்டார்கள். கொள்முதல் பொருட்களால் நஷ்டமும் பொருள் தேக்கமும் உண்டாகும் கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளுடன் கருத்துவேறுபாடுகள் உண்டாகும். கமிஷன் ஏஜென்ஸி ஏற்றம் தராது.

**உத்தியோகஸ்தர்களுக்கு:** உத்தியோகநிலையில் மேலதிகாரிகளிடம் தேவையற்ற வீண் வாக்குவாதமும் வேலை சரிவரசெய்ய முடியாதபடி பலவிதமான சங்கடங்களையும் எதிர்கொள்வீர்கள். சிலருக்கு புதிய இடமாறுதலால் குடும்பத்தைவிட்டு இங்கும் அங்குமாக அலைய நேரிடும். படித்து வேலை தேடுபவர்களுக்கு வேலை அமையாது. சிலருக்கு வெளிநாட்டுப் பணியில் பலவிதமான சிக்கல்களால் ஊதியம் கைக்குவர தாமதமாகும்.

**பெண்களுக்கு:** உடல்நலனில் அக்கறை எடுக்க வேண்டிய காலமாகும். குடும்பத்தில் கணவன் மற்றும் கணவன் வீட்டாருடன் அனுசரித்துப்போக முடியாத நிலை உண்டாகும். பிள்ளைகளால் மனஅமைதி குறையும் திருமணம் ஆகாத பெண்களுக்கு செப்டம்பருக்கு பிறகு முயற்சி மேற்கொண்டால் ஓரளவு அனுகூலப் பலனை அடையமுடியும். உத்தியோகம் செய்யும் பெண்களுக்கு வேலைப்பளு கூடும். அதிகாரிகளின் கெடுபிடிகளை நிதானமாக சமாளிக்க நேரிடும்.

**மாணவ மாணவியருக்கு:** கல்வியிலும் விளையாட்டிலும் கண்டிப்பாக நல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். என்னதான் படித்தாலும் ஞாபகமறதி உண்டாகும். சரஸ்வதி தேவியை தியானித்து படிக்கத் தொடங்குவது நல்ல பலனைத் தரும். நண்பர்களை தேர்வு செய்யும்போது கவனமுடன் செயல்பட வேண்டும். கண்ணும் கருத்துமாக படித்தால் கண்டிப்பாக ஓரளவு உயர்வினை அடையலாம்.

**கலைஞர்களுக்கு:** உங்களின் திறமைகளையும் வேகத்தையும் மற்றவர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள். தொழில் ரீதியாக போட்டி பொறாமைகள் உண்டாகும். பெரிய மனிதர்களின் ஆதரவுபெற கூடுதல் முயற்சி மேற்கொள்வது நல்லது. வெளிநாடு மற்றும் வெளியூர் படப்பிடிப்புக்கு செல்வது உங்களுக்கு அதிக சோர்வையும் அலைச்சலையும் ஏற்படுத்தும்.

**பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் மக்களின் வாக்குறுதிகளை கஷ்டப்பட்டாவது காப்பாற்ற முயற்சி மேற்கொள்ளவேண்டும். அதிக அலைச்சல் டென்ஷனைச் சந்தித்தாலும் தொண்டர்களின் ஆதரவுகள் குறையும். சமூகசேவையில் ஈடுபடும்போது கவனம்தேவை.

# உங்களுக்கு எப்படி?

**தொழிலாளர்களுக்கு:** உழைப்பிற்கு ஏற்ற பலன் குறையும் காலமாகவே இருக்கும். ஒரு வேலையினை முடிக்க பல விதமான இடையூறுகள் உண்டாகும். புதிய வேலைகிடைக்க தடை உண்டாகும். உடன் பணிபுரிபவர்களால் தொல்லைகளும் தொந்தரவுகளும் ஏற்படும்.

**சனிபகவான் குரு சாரத்தில் புனர்□சம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் 27.06.2005முதல் 21.07.2005வரை**

குடும்பத்தில் கணவன் மனைவி இடையே வீண் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டபடியே இருக்கும். பிரச்சினைகளை அதிகமாக்கிக்கொள்வீர்கள். மற்றவர்களின் தவறுகளுக்கு உங்கள் இடையே வாக்குவாதம் நிகழும். ஒருவருக்கு ஒருவர் பிரச்சினையை பெரிதாக்காமல் இருப்பது நல்லது. வண்டி வாகனம் மூலம் செலவுகள் ஏற்படும். பொருளாதாரநிலையில் ஏற்றமிருக்காது. பற்றாக்குறையும் கடன் தொல்லைகளும் மனவருத்தப்பட வைக்கும். உடல் நலம் பாதிப்படையும். எடுக்கும் திருமண சுபகாரியம் தடைப்படும். உற்றார் உறவினர் நண்பர்களால் பகை உண்டாகும். தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் கமிஷன் ஏஜன்ஸி கான்டிராக்ட் போன்றவற்றில் நலிவும் இலாபம் இல்லாத சூழ்நிலையும் பொருள் தேக்கமும் நிலவும். உத்தியோக ரீதியாக அதிகாரிகளிடம் விண் மனஸ்தாபமும் எதிர்பாராத இடமாறுதலை சந்தித்து அலைச்சல் டென்ஷனை ஏற்படுத்தும். மாணவர்கள் கல்வி ஆர்வம் குறையும்.

**சனிபகவான் சனி சாரத்திரல் □சம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும்காலம் 22.07.2005முதல் 19.11.2005வரை**

உடல் நலக்குறையும் புத்திரவழியில் கவலை அளிக்கும் சம்பவமும் நடைபெறும். தொடங்கியிருந்த தொழிலில் சோதனைகளை ஏற்படுத்தும். பொருளாதார நிலையில் தனவரவுகள் வந்தாலும் சுபவிரயம் செலவுகளும் கட்டுக்கு மீறியதாக அமையும். மனைவிக்கும் பிரசவ சிக்கல் கர்பக்கோளாறுகள் உண்டாகும். மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு தடைகளை ஏற்படுத்தும். சிலருக்கு புத்திரர்கள் சொத்து பாகம்கேட்டு வம்பு வழக்கு தொடர்வார்கள். ஸ்திர சொத்துக்களை விற்க வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்தும். கவனமுடன் செயல் பட வேண்டும். தொழில் வியாபார நிலையில் மந்தமான சூழ்நிலை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல்களில் சிக்கிக்கொள்ளவும் நேரிடும். திருமண சுபகாரியம் தடைப்படும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நிலவும். உத்தியோக ரீதியாக அதிகாரிகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு எதிர்பாராத இடமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். வெளியூரப் பயணத்தால் அரசியல்வாதிகள் சோர்வடைவார்கள்.

**சனிபகவான் வக்ர கதியில் 20.11.2005முதல் 06.04.2006வரை**

உடல் ஆரோக்கியமும் பலமும் வளமும் சிறப்பாக புதுப்பொலிவுடன் அமையும். குடும்பத்தில் சிறப்பான சுபீட்சமான நிலை ஏற்படும். கணவன், மனைவி உறவு மிக அற்புதமாக அமையும். சிலருக்கு ஆண்குழந்தை பிறக்கும். திருமண சுபகாரியம் தடபுடலாக அமையும். சந்தோஷம் பூரிப்பு உண்டாகும். அளவிடமுடியாத செல்வச் சேர்க்கை ஏற்படும். வீட்டை கட்டிமுடித்து குடிபுகுவீர்கள். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிமேல் வெற்றி உண்டாகும். தொழில் வியாபார நிலையில் அபிவிருத்தியும் மேன்மையும் லாபமும் கூடும். புதிய தொழிலைத் தொடங்குவது அபிவிருத்தி செய்வதாலும் சிறப்பான லாபம் கிட்டும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளுடன் சிறப்பான நம்பிக்கை நாணயம் உண்டாகும். உத்தியோக நிலையில் நல்ல பதவி உயர்வும் விரும்பிய இடமாறுதலும் அற்புதமான ஏற்றம்தரும். அரசுவழியில் ஆதாயம் உண்டாகும். கொடுக்கல்வாங்கல் அற்புதமாக அனுகூலம் தரும். எடுக்கும் காரியம் சிறப்பான ஏற்றம்தரும். மாணவர்களின் கல்வியில் அதிக மதிப்பெண் கிட்டும்.

**சனிபகவான் சனி சாரத்தில் □சம் நட்சத்திரத்தில் 07.04.2006 முதல் 27.7.2006வரை**

உங்களுக்கு இக்காலத்தில் படிப்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் காலமாகவே அமையும். உடல்நலக் கோளாறுகள் சிறிதளவு மருத்துவச் செலவுக்கு பின்பு தேறிவிடும். மனைவி மற்றும் குழந்தைகளின் நலனில் சிறிது அக்கறை எடுத்து விடுவீர்கள். குடும்பத்தில் பொருளாதாரத்தடைகள் சற்றே விலகி சுமாரான பண வரவு வர ஆரம்பிக்கும். பட்ட கடன் தொல்லைகளை பாதியாகக் குறைத்து விடுவீகள். திருமண சுபகாரிய முயற்சிகளுக்கு நிலவிய இடையூறுகள் மறையும். தொழில் வியாபாரநிலையில் போட்டி பொறாமைகள் குறைந்து படிப்படியான ஏற்றம் பெறுவீர்கள். ஓரளவு லாபமும் கூட்டுத்தொழில் கமிஷன் ஏஜன்ஸி கான்டிராக்ட் போன்றவற்றில் எதிர்பார்க்கலாம். உத்தியோக நிலையில் அதிகாரிகளின் கெடுபிடி குறையும். பிற்பாதியில் பதவி ஊதிய உயர்வுகளை எதிர்பார்க்க முடியும். மாணவர்களின் கல்வி நிலை உயரும்.

**சனி பகவான் புதன் சாரத்தில் ஆயிலியத்தில் 28.07.2006 முதல் 2.12.2006வரை**

உங்களுக்கு மனதில் பூரிப்பும் உடல் நலனில் சிறப்பான ஆரோக்கியமும் குழந்தைகளும் சுபீட்சமுடன் அமைவார்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து மறையும். கணவன் மனைவி இடையே கலகலப்பும் ஒற்றுமையும் சந்தோஷமும் அமையும். குடும்பத்தில் பொருளாதார நிலையில் தாராளமான தன வரவுகளால் கடன்தொல்லைகளை பைசலாக்குவீர்கள். வீடு மனை வண்டிவாகனம் ஆடை ஆபரணம் சேரும். திருமண சுபகாரியத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். தக்க சமயத்தில் புத்திர பாக்கியம் கிட்டும். கொடுக்கல் வாங்கலில் அனுகூலப் பலன்கிட்டும். தொழில் வியாபாரம் கூட்டுத் தொழிலிலும் பிரமாதமான ஏற்றமும் லாபமும் அமையும். வெளியூர் வெளிநாட்டுப் பயணம் மிகவும் அனுகூலத்தை ஏற்படுத்தும். அரசியலில் உயர் பதவியும் பெருமையும் உண்டாகும். உத்தியோக நிலையில் கௌரவ பதவிகளை அடைவீர்கள்.

**சனி பகவான் வக்ரகதியில் 3.01.2006முதல் 19.04.2007வரை**

இக்காலத்தில் உங்களுடைய தொழில்வியாபார நிலையில் பலத்தபோட்டி பொறாமைகளையும் கடுமையான சோதனைகளையும் எதிர்கொள்ள் நேரிடும். இலாபம் இருக்காது அதிக கடன்களின் தொல்லைகளால் மனதில் அமைதி குறையும். தொழில்நுட்பக்கருவிகளும் வண்டி வாகனமும் பழுதடையும். செலவுகளையும் ஏற்படுத்தும். தூரப்பயணம் தவிர்க்க வேண்டும். கூட்டுத் தொழிலை கூட்டாளிகளிடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும். உத்தியோகநிலையில் அதிகாரிகளின் கெடுபிடியும் உழைப்பிற்கு ஏற்றபலனைப் பெற முடியாது. அடிக்கடி விடுப்பு எடுக்க நேரிடும். புதிய வேலை கிடைக்க தடை தாமதம் உண்டாகும். பொருளாதார நிலையில் சோதனைகள் உண்டாகி கஷ்டம் உண்டாகும். திருமண சுபகாரியம் தடைப்படும். உடல்நலம் பாதிப்படையும். பிள்ளைகளால் மனச்சஞ்சலம் ஏற்படும். கணவன் மனைவி இடையே பூசல்கள் ஏற்படும்.

**சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியத்தில் 20.04.2007முதல் 05.08.2007வரை**

இக்காலத்தில் உங்களுக்கு மிகவும் சோதனைகளை ஏற்படுத்தும். மன அமைதி குறையும் படியான சூழ்நிலைகள் உண்டாகும். குடும்பத்திலும் குழப்பமான நிலை உருவாகும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும். எடுக்கும் காரியம் யாவும் தடைப்படும். உடல் நலனில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். அதிக மருத்துவச் செலவுகள் மனைவி குழந்தைகளின் வழியில் ஏற்படும். பொருளாதரா நிலையில் தேக்கம் உண்டாகும். கடன் தொல்லையால் நிம்மதி குறையும். தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் வியாபார நிலையில் நலிவும் பொருள் தேக்கமும் அரசு மூலம் பலவிதமான சோதனைகளையும் ஏற்படுத்தும். உத்தியோக நிலையில் எதிர்பாராமல் இடமாற்றம் ஏற்பட்டு அலைச்சல் டென்ஷனை சந்திக்க நேரிடும். அரசியலில் மதிப்புக் குறையும். திருமண சுபகாரியம் தடைப்படும். மாணவர்கள் கல்வியில் மந்தமாவார்கள்.

**அதிர்ஷ்ட குறிப்புகள்**

அதிர்ஷ்ட கிழமை: செவ்வாய், வியாழன்
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ஆரஞ்சு
அதிர்ஷ்ட தெய்வம்: முருகன்
அதிர்ஷ்ட திசை: தெற்கு
அதிர்ஷ்ட கல்: பவளம்

(தொடரும்)

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

பொலிகண்டி கந்தவனக் கடவை கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பதினைந்து தினங்கள் இடம்பெறும் இத் திருவிழாவில், இன்று திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ந-21)

## திக்கம் மீனவர்களுக்கு படகுகள்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட திக்கம் பகுதியைச் சேர்ந்த 94 மீனவர்களுக்கு கியூமெடிக்கா நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை படகுகளை வழங்கியுள்ளது.

இதுவரை கியூமெடிக்கா நிறுவனம் ஆயிரம் படகுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் தும்பளை, பருத்தித்துறை, சக்கோட்டை ஆகிய இடங்களில் 200 படகுகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-43)

## பிரி.அமைச்சர் விஜயம்

(லண்டன்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்ப பொதுக்கட்டமைப்பை துரிதமாக ஏற்படுத்த வேண்டும் என பிரிட்டன் அபிவிருத்தி அமைச்சர் ஹரத் தோமஸ் தெரிவித்துள்ளார்.

சுனாமி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக பிரிட்டன் அரசாங்கம் 78 மில்லியன அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊட கவியலாளா மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பிரித்தானிய அபிவிருத்தி ஹரத் தோமஸ அறுகம்பை, அம்பாறை, ஹிக்கடுவை, காலி ஆகிய சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தார். (ந-4)

## கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச மட்ட கலாசார விழா எதிர்வரும் ஜூலை மாதம் 7,8ஆம் திகதிகளில் நல்லூர் பிரதேச செயலரின் தலைமையில் யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத் தினங்களில் கலாசார நிகழ்வுகளாக நாடகம், பட்டிமன்றம், வில்லுப்பாட்டு, இளைஞர் கௌரவிப்பு, கலாசார சிறப்புரைகள் என்பன நடைபெறவுள்ளன. (ந-19)

## வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

பூநகரி - கல்முனை வீதி ஒரு கோடி ரூபா நிதி செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் இருந்து வந்த இவ்வீதியை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்குப்பிட்டி செல்வதற்குப் பயன்படும் இவ்வீதியானது - பூநகரி ஆலடிச் சந்தியிலுள்ள சுமார் 18 கிலோமீற்றர் வரை கிரவல் போட்டு திருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-49)

## சிரமதானம்

(பொன்னாலை)

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள ஆலய வதியை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்துள்ளனர்.

முத்துமாரி அம்பாளின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனையொட்டியே மேற்படி மாணவர்கள் சிரமதானப் பணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-49)

## வாக்காளர் விபரம் பார்வைக்கு

2004ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பிலிருந்து சாவகச்சேரி நகரப்பகுதி வாக்காளர் விபரம் பிரித்தெடுக்கப்பட்ட பதிவுப் புத்தகம் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தில் இதனைப் பார்வையிடலாம் என நகரசபை செயலாளர் அறிவித்துள்ளார். (ந-21)

### வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு

# கியூமெடிக்கா நிறுவனம் 109 படகுகளை வழங்கியது

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களுக்கு கியூமெ டிக்கா நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை 109 படகுகளை வழங்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கினை கியூமெடிக்கா நிறுவனப் பணிப்பாளர் சம்ஜெயசூரியர் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் செஞ்சேரன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான படகுகள் கையளிக்கப்பட்டன. (ந-43)

# உழைக்கும் கலைஞர்களுக்கு கருத்துச் சுதந்திரம் வழங்குக!

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகப் பிரிவுகளில் சட்டரீதியான திரைக்கலைச் சங்கங்களை அமைப்பது சம்பந்தமாக ஆராயும் சந்திப்பொன்று இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் க.தேவதாசனிற்கும் 'சலனசித்திரம்' அமைப்பின் அங்கத்தவர்களுக்கும் இடையில் கடந்த 12ஆம் திகதி கரவெட்டியில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில், பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'சலனசித்திரம்' அமைப்பின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மற்றும் உறுப்பினர்கள் மீது பொலிஸ் கெடுபிடிகள், விசாரணைகள் கொழும்பில் தொடர்வதை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

உடனடியாக இச் செயலைக் கைவிட்டு உழைக்கும் கலைஞர்களின் தொழில் சுதந்திரத்திற்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் மதிப்பளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறோம். தவறின் கடந்த காலங்களைப் போன்று போராட்ட வடிவங்களை முன்னெடுக்கும் நிலைக்கு நாம் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

மேற்படி சந்திப்பில் அமைப்பின் பெருந்தலைவர் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், பொதுச் செயலர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, தலைவர் வி.எஸ்.சிவனேசன், மாவட்ட தொடர்பாளர் சி.விவனா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ந)

# பல இலட்சம் பெறுமதியான நகைகளும் பொருட்களும் களவு

(சாவகச்சேரி)

கடந்த இரு வாரங்களின் முன்பு மீசாலைப் பகுதி வீடொன்றில் இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களும், பெறுமதி வாய்ந்த பொருட்களும் நள்ளிரவு வேளை திருடப்பட்டது.

மீசாலை மேற்கு பங்களா வீதியைச் சேர்ந்த மின்சாரசபை சாரதியான சி.பேரம்பலம் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

யன்னல் கம்பியை வளைத்து உள் நுழைந்த திருடர்கள் அறையில் அலுமாரியினுள் இருந்த மேற்படி பொருட்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

அயல் வீட்டு உலக்கை மூலமாகவே பிரஸ்தாப வீட்டின் யன்னல் கம்பி வளைக்கப்பட்டுள்ளது. இவ் உலக்கை வேறோர் வீட்டு வளவிலிருந்து கண்டெடுக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-21)

### யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களின்

# தொழில் வளத்தை மேம்படுத்துவதற்கு ஊடகவியலாளர் சங்கம் நடவடிக்கை

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களின் தொழில் வளத்தை மேம்படுத்தவும் சுயமாகத் தொழிலாற்றவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் முன்வந்துள்ளது.

இதற்கான பதிவுகளை யாழ்.மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் சங்கச் செயலாளர் ரி.மயூரன் உடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியும்.

அத்துடன் பதிவு செய்யும் ஊடகவியலாளாகளுக்கு மட்டுமே தொழில் உபகரணங்கள வழங்கப்படும் எனவும் சங்க வட்டாரங்கள தெரிவித்தன.

புதிய நவீன ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப பணியாற்றக்கூடிய வகையில் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (ந-43)

# மட்டக்களப்பு தமிழர். பு. கழக பணிமனைக்கு பொலிஸ் பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

கடந்த திங்கள் இரவு இனந்தெரியாத நபர்களினால் குண்டுத் தாக்குதலுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகிய மட்டக்களப்பு டயஸ் வீதியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலின்போது மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக எரிந்து சாம்பராகியதுடன் முச்சக்கரவண்டி ஒன்றும் பலத்த சேதமடைந்துள்ளது. இரவு நேரக் காவலாளி ஒருவர் இச்சம்பவத்தின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும சிகிச்சை பெற்று வருகின்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவர்களுக்கு ஒரு தொகை தற்காலிக குடிமனைகளை அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பில் 350 பேர் பணியாற்றி வருகின்றனர். (து-2)

# பாராளுமன்றை நடாத்த ஜே.வி.பியினருடன் பேச்சு

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகினாலும் பாராளுமன்றத்தை நிலையாகக் கொண்டு செலல அதன் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாணடோபுள்ளே தெரிவித்துள்ளார்.

22ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் ஜே.வி.பி பாராளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்சவைச் சந்தித்து நான் இது குறித்து பேச எண்ணியுள்ளேன்.

அடுத்த வரவு செலவு திட்டம் வரை பாராளுமன்றத்தை எவ்வித பிரச்சினையும் இன்றி கொண்டு நடத்தமுடியும். அடுத்த வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு இடமுண்டு எனவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## வீதி சேதம்

(பொன்னாலை)

அராலி கிழக்கு - பத்திரகாளி கோவிலுக்குச் சமீபமாகச் செல்லும் கல்லு வீதி கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாதுள்ளது.

இதனால் மாரி காலங்களில் மக்கள் இவ் வீதி வழியாக போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வலி-மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இவ் வீதியை மிக விரைவில் திருத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனார்.

* * *

(பொன்னாலை)

மருதங்கேணி -ஆழியவளை பிரதான வீதி நீண்டகாலமாகச் செப்பனிடப்படாதிருப்பதால் இவ்வீதியூடாகப் பயணிப்பதில் பொது மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதியை திருத்தியமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மருதங்கேணி உதவி அரச அதிபரை அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ந-49)

## போ/வ கண்காணிப்பில் பொலிஸார்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் அதிகரித்து வரும் விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரி நகரப்பகுதி சந்திகளில் தினமும் வாகன ஆவணங்கள் வரி, காப்புறுதிப் பத்திரங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றோடு போக்குவரத்து விதிமுறைகளும் பொலிஸாரினால் பார்வையிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-21)

## நிர்வாகசபை தெரிவு

(பொன்னாலை)

அராலி மத்தி - ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின் புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிர்வாகசபையின் தலைவராக பொ.தருமராசாவும், செயலாளராக அ.ஞானசேகரனும், பொருளாளராக ப.தருமராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ள்னர். மேலும் 8பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (அ-49)

## போயா ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தால் நாளை செவ்வாய்க்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறவுள்ளது. (ந)

## தேவாரத் திரட்டு முற்றோதல

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன பிரசித்தி பெற்ற வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆலய பரிபாலகரின் அனுசரணையுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளன. (ந-9)

## வாராந்த சந்தை

(பொன்னாலை)

பூநகரி பிரதேச சபை, அப்பகுதி விவசாயிகளின் நன்மைகருதி, நாச்சிக்குடா சந்தியில் வாராந்த சந்தையொன்றை நிறுவியுள்ளது.

இச்சந்தையில் வியாபாரம் செய்ய விரும்புபவர்களிடம் வரி எதுவும் அறவிடப்படமாட்டாது என பூநகரிப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

இச் சந்தையில் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் கொள்வனவு செய்யக் கூடியதாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-49)

## வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

பேராசிரியை நவமணி செல்வராஜா எழுதிய,

**A COCKTAIL IN ENGLISH** என்ற ஆங்கில் நூல் வெளிவந்துள்ளது. (து)

# பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் நினைவுப் பேருரை

# இடைநிலை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு

# நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக 30.05.2005ஆம் திகதி ''இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு, நோர்வே - எத்தியோபபியா - இலங்கை" என்ற தலைப்பில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மற்றும் உப பீடாதிபதி பாலசுப்பிரமணியம் தனபாலன் ஆகியோர் நிகழ்த்திய நினைவுப் பேருரையின் தொகுப்பு.

(தொடர்ச்சி.....) 4

**எத்தியோப்பியா (Ethiopia)**

**அமைவிடம்:**

எத்தியோப்பியா கிட்டத்தட்ட 1.4 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 65% சதவீதத்திற்கு விவசாயம் செய்யக்கூடிய காணிகளை எத்தியோப்பியா கொண்டிருந்தபோதும் 15% சதவீதம் மட்டுமே தற்பொழுது விவசாயத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது ஆபிரிக்காவின் மேற்பகுதியில் அமைந்துள்ளது. இந்நாடு தரையால் சூழப்பட்டிருந்தாலும் டிஜிபொற்றி (Djibouti) மற்றும் கென்யா(Kenya) ஆகிய நாடுகளின் துறைமுகங்களைப் பயன்படுத்தி வருகின்றது. இந்நாட்டின் எல்லைகளாக எறிற்றீரியா, சோமாலியா மற்றும் சூடான் ஆகிய நாடுகள் உள்ளன.

இந்நாட்டின் பூகோள ரீதியான அம்சங்களாக 4500மீற்றர் வரை உயர்ந்த மலைகள், பீடபூமிகள், பாலைவனங்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் உள்ளன. இங்கு பரந்தளவிலான சுவாத்திய மாற்றங்கள் உள்ளன.

எத்தியோப்பியாவுக்கு பருவ காலங்கள் மூன்று உண்டு. பெப்ரவரியிலிருந்து மே மாதம் வரையான சிறிதளவு மழைவீழ்ச்சிக் காலம், யூனிலிருந்து செப்ரம்பர் வரையான அதிக மழை வீழ்ச்சிக்காலம், ஒக்ரோபரிலிருந்து ஜனவரி வரையான வரண்ட காலப்பகுதி. சில வருடங்களில் வெள்ளப் பெருக்குகள் மற்றும் வரட்சியும் ஏற்படுவதுண்டு. ஆனால் சாதாரணமாக ஒரு வருடத்தில் இந்நாட்டின் பல பகுதிகளில் இரு அறுவடைகளைப் பெறக்கூடியதாக உள்ளது. இதனது தலைநகரான அடிஸ அபாபா (Addis-Ababa) மத்திய மலைப்பகுதியில 2400 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது.

**கலாசாரம்:**

இங்கு 65 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். இதன் கலாசாரத்தின் மிகக் குறிபிடத்தக்க அம்சம் இலக்கியத்துறையில் உள்ளது. இக் கலாசாரம் பெரும்பாலும் கிரேக்க, அராபிய மற்றும் ஏனைய மொழிகளிலிருந்து புராதன ஜீஸ் (Geez) மற்றும் நவீன அம்காரிக மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டவையாகும். அநேகமான படைப்புக்கள் சமய ஆராய்ச்சி அல்லது புராணக்கதைகள் போன்ற தன்மையுடையவையாக உள்ளன. உலக விவகாரங்கள் குறித்த இலக்கியங்கள் பெரும்பாலும் வரலாற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன.

இந்நாட்டில் கிறிஸ்தவ மதம் ஆரம்ப காலந்தொட்டு இந்நாட்டில் பரவியதன் காரணமாக சமயத்துடன் தொடர்புடைய கட்டடக்கலை இங்கு ஒப்பீட்டளவில் சிறப்பானதாக உள்ளது. இவ்வாறான கட்டமைப்புகளும் அவற்றின் சுவர் ஓவியங்களும் பிசான்ரீன் (Byzantine) மற்றும் கொப்ரிக் (Coptic) செல்வாக்குக் கொண்டவையாக உள்ளன. எத்தியோப்பியாவின் தேர்ச்சியும் கற்பனை வளமும் கொண்ட வெள்ளி ஆபரண வேலைப்பாடு குறிப்பிடத்தக்கதாகும்.

**எத்தியோப்பியாவின் கல்வி முறை:**

எத்தியோப்பியாவில் மக்களின் கல்வியின் நிலை மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. உதாரணமாக, 1994 இன் குடிசன மதிப்பீட்டின் படி 5வயதும் அதற்கும் கூடுதலான வயதுடையவர்களின் மொத்த சனத்தொகையில் 11% சதவீதத்தினர் ஆண்களாகவும், 8% சதவதத்தினர் பெண்களாகவும் இருந்ததுடன் இவ்விரு பாலாரில் 10% சதவீதத்தினர் பல்வேறு மட்டங்களில் பாடசாலைக்குச் சமுகமளித்தனர். நகரப்புறங்களில் கல்வி கற்போர் 34% சதவீதமாகவும் கிராமப்புறங்களில் கறபோரின் வீதம் 6% சதவீதமாக மட்டுமிருநதது.

எத்தியோப்பியாவின் மொத்த சனத்தொகையில் 10 வயதும் அதற்குக் கூடுதலான வயதுடையோரில் 30% சதவீதத்தினர் ஆண்களாகவும், பெண்கள் 17% சதவீதத்தினராகவும் இவ்விரு பாலாரில் 23 % சதவீதத்தினர் கல்வியறிவு உடையவர்களாகவும் இருந்தனர். நகர மற்றும் கிராமியப் பகுதிகளில் கல்வியறிவு வீதம் முறையே 69% சதவீதமாகவும் 15% சதவீதமாகவும் காணபட்டது (CSA 1998).

எத்தியோப்பியாவின் புதிய கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கையானது கல்விக் கட்டமைப்பை மாற்றிவிட்டது. இதன் பிரகாரம் 6-2-4 என்ற கட்டமைப்பு (ஆரம்பக் கல்வியில் 6 வருடங்கள், கனிஷ்ட இடைநிலையில் 2 வருடங்கள், சிரேஷ்ட இடைநிலையில் 4 வருடங்கள்) 8-2-2 என மாற்றமடைந்தது (ஆரம்பக் கல்வி 8 வருடங்கள், கீழ் இடைநிலை 2வருடங்கள், மேல் இடைநிலை 2வருடங்கள்).

கல்வித்துறையின் 'தந்திரோபாயமானது (TGE, 1994 B Habtamu வில் மேற்கோளாகக் காட்டப்பட்டது) அடிப்படைப் பொது, உயர் மற்றும் விசேடத்துவக் கல்வியின் கட்டமைப்பைப் பின்வருமாறு விபரிக்கின்றது.

> **கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
> (பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
> **பாலசுப்பிரமணியம் தனபாலன்**
> (உப பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)

* 4-6 வயது வரையான சிறார்களுக்கான பாலர் பாடசாலை முறை

* 1ஆம் தரத்திலிருந்து 8ஆம் தரம் வரையான ஆரம்பக்கல்வி இரு உபபிரிவுகளாக அடிப்படை (1-4 ஆம் தரம் வரை) மற்றும் பொதுக் கல்வி(5-8 ஆம் வரை) எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

*பொதுவானதொரு இடைநிலைக் கல்வி, 9-10 ஆம் தரம் வரை.

*இரு வருட சிரேஷ்ட இடைநிலைக் கல்விக்குத் தயார்ப்படுத்தலும் இதற்கு சமாந்தரமாகத் தொழிற்கல்வி மற்றும் தொழிநுட்பக் கல்வியும்.

* டிப்ளோமாவுக்கான 1-2 வருடங்கள் வரையான உயர்கல்வியும், பட்டதாரிப் படத்துக்கான 3-5 வருடங்கள் வரையான பட்டப்படிப்பும், பட்டப்பின் படிப்புக்கான மேலும் 1-3 வருடங்கள் வரையான கல்வியும்.

*பாடசாலைக் கல்வியுடன் சமாந்தரமாக தொழில்சார்/ தொழில்நுட்ப பயிற்சி முறையும் ஒன்றிணைக்கப்படுதல்

*விசேட கல்விமுறையும், கல்விமுறையின் ஏனைய பகுதியுடன் தொலைக கற்றலை ஒன்றிணைத்து அனுசரணை வழங்குவது.

தமது சொந்த மொழியைச் சிறார்கள் கற்றுக்கொள்வதற்கு இப்புதிய கொள்கை அனுமதிப்பதாக உள்ளது. சகல மட்டங்களுக்காகத் தொழிற் கல்வியை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவத்தையும் இக் கொள்கை வழங்குகின்றது. பாடவிதானத்தில் இவ்வாறான மாற்றங்களும் செய்முறை ஆற்றல்களுக்கு முக்கியத்துவமும் கற்பத்தலுக்கான மொழிமூலமும் ஊனமுற்ற பிள்ளைகளுக்குப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

ஏனெனில் ஒவ்வொரு பிள்ளையும் அதனது சமூகத்தில் வசித்து வேலை செய்யக் கூடியவாறு தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதனாலாகும் (Tibebu 1995).

கல்வி பற்றிய புள்ளிவிபரங்களைக் கொண்ட வருடாந்த அறிக்கையின்படி 2000/2001 கல்வியாண்டில் எத்தியோப்பியாவில கல்விரீதியில் பங்களிப்பு வீதம்:-

ஆரம்பக்கல்வி -75%

இடைநிலைக்கல்வி -12%

(தொடரும்)

---

## றொபியை உண்டவர் மயக்கம் ஒரு லட்சம் பணம் கொள்ளை

(துன்னாலை)

மயக்கமருந்து கலந்த றொபியைக் கொடுத்து ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் பணத்தைத் திருடிய சம்பவம் ஒன்று பருத்தித்துறை சுப்பர் மடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

அதே இடத்தைச் சேர்ந்த அருள்பலம் ஜெகதீஸ்வரன்(வயது34) என்பவர் சீட்டுக்காசு கட்டுவதற்காக குறிப்பிட்ட தொகைப் பணத்தைக் கொண்டுசென்றுள்ளார்.

அப்போது ஓராங்கட்டைக்கும் கிராமக் கோட்டுககும் இடையில் சென்றுகொணடிருந்த போது அவரை வழிமறித்த இருவர் விசாரணைக்கென அழைத்துச் சென்று றொபியை உண்ணுமாறு கொடுத்துள்ளனர்.

அதனை உண்ட அவர் மயக்கமுறவே அவரின் கழுத்தை கூரிய ஆயுதமொனறினால் வெட்டிய பின்பு அவரிடமிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

சிறிது நேரத்தில் கண்விழித்துப் பார்த்த பிரஸ்தாப நபர் தனது பணம் களவாடப்பட்டிருப்பதை உணர்ந்தார். பின்னர் அயலிலிருந்த உறவினர்களின் உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ச-101)

## ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 20 இல்

(கொழும்பு)

ஐந்தாம் தரத்திற்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இவ்வருடம் மூன்று இலட்சத்து 25ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி முடிவடைந்துள்ளதால் தவிர்கக முடியாத காரணங்களினால் விண்ணப்பிக்கத் தவறிய பாடசாலைகளிருப்பின் அவற்றின் அதிபர்கள் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் புதிய பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க கேட்டுள்ளார்.

இதேவேளை, இவ்வருடம் முதன் முறையாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்படும் தகவல்தொழில்நுட்ப பாடத்திற்கான பரீட்சை ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நடைபெற இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதால் சமாதானம் ஏற்பட்டு விடுமா?

(கொழும்பு)

சுனாமி நிவாரண பொதுக்கட்மைப்பு நிறுவும் திட்டத்தை அரசாங்கம் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் கொடுக்கும் அழுத்தங்களை பதிய இடதுசாரி முன்னணி கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி முன்னணியினர் இனவாதத்துக்கெதிராக கொழும்பில் நடத்திய எதிர்ப்பு இயக்கத்தில் பங்கேற்ற இடதுசாரி முன்னணியின் தலைவர்கள், எந்தவொரு அரசியல் கட்சியும் இனவாதத்தை தூணடும் வகையில் நடந்துகொள்ளக்கூடாது என வலியுறுத்தியுள்ளார்கள்.

பிக்குமார் முன்னணி பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதால்அவ் அமைப்பு சமாதான முயற்சிகளை ஆதரிப்பது எவ்வாறு என இடதுசாரி முனனணி கேள்வி எழுப்பியுள்ளது.

தறபோதைய சூழ்நிலையில் பொதுக்கட்டமைப்பு யோசனை வாபஸ் பெறப்பட்ட அனைத்து மக்களும் பாதக விளைவை எதிர்கொள்ள நேரிடும என்று அந்தக் கட்சி எச்சரித்துள்ளது. (து-9)

## பல்கலையில் பகிடிவதை மாணவன் படுகாயம்

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்நத கலைப்பீட மாணவர் ஒருவர் பகிடிவதை காரணமாக பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவனான எ.என்ஹரிசாத் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஏனைய மாணவர்கள் தாமும் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவோம் என அஞ்சி பல்கலைக்கழக வகுப்புக்களில் கலந்துகொள்வதை தவிர்த்து வருவதாகத் தெரியவருகிறது. (ரு-9)

## மஹோற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-79)

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும் - குறள்

வலம்புரி

# இனக் கலவரம் ஏற்படும் சாத்தியம் தெரிகிறது

பொதுக் கட்டமைப்பை கைவிடுமாறு ஜே.வி.பியினர் விடுத்த நிபந்தனையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்க மறுத்ததால், அரசுக்கான ஆதரவை ஜே.வி.பி. விலக்கிக்கொண்டது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் ஆலோசனை கூறிவருகின்ற போதிலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அரசுக்கான ஆதரவை ஜே.வி.பி. விலக்கி இருப்பது அந்தக் கட்சியின் இனவாதப்போக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தை தக்கவைப்பதற்காக தமது நிபந்தனைக்கு ஜனாதிபதி உடன்படுவார் என்ற நம்பிக்கையிலேயே ஜே.வி.பி. காலக்கெடு விதித்திருந்தது. எனினும் ஜே.வி.பியின் எதிர்பார்ப்பிற்கு மாறாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த தீர்மானம் ஜே.வி.பியினருக்கு பலத்த அவமானத்தைக் கொடுத்துள்ளது.

ஆளுந்தரப்பிலிருந்து அரசியல் லாபத்தைப் பெறவேண்டும். குறித்த அமைச்சுக்களை தம்மிடம் தரவேண்டும். அதன்மூலம் சிங்கள மக்களின் ஆதரவை ஜே.வி.பியின் பக்கம் திரட்டவேண்டும் என்றெல்லாம் திட்டந்தீட்டி அவை சாத்தியமாகிய ஆரம்பத்திலேயே போட்டுடைத்த சோகம் ஜே.வி.பிக்கு பெரும் இழப்பாகும்.

சிலரை சிலகாலம் ஏமாற்றலாம். பலரைப் பலகாலம் ஏமாற்றமுடியாதென்ற தத்துவம் ஜே.வி.பியின் சமாச்சாரத்தில் சாலப் பொருந்திவிட்டது. பொதுக்கட்டமைப்பை கைவிடுமாறு தாம் விதித்த நிபந்தனையை ஜனாதிபதி தூக்கியெறிந்ததன் மூலம் உள்நாட்டிலும், சர்வதேசத்தின் மட்டத்திலும் அவப்பெயருக்கு ஆளாகிப்போயுள்ள ஜே.வி.பிக்கு தனக்கு ஏற்பட்ட அவமானத்தை நிவர்த்தி செய்யும் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

"இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்ற முதுமொழிக்கு அமைவாக கெட்ட சிந்தனை உள்ளவன் கெட்டதையே எண்ணுவான் என்ற அடிப்படையில் ஆளுந்தரப்பிலிருந்து நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவித்த ஜே.வி.பி. எதிர்த்தரப்பிலிருந்தும் அதனையே செய்யப்போகிறது.

அரசியல் வாழ்க்கையில் என்றுமில்லாத அவமானத்தைப் பெற்றுக்கொண்ட அவர்கள், நிச்சயம் நாட்டில் குழப்பங்களை, வன்முறைகளை ஏற்படுத்தும் நடவடிக்கையிலேயே ஈடுபடுவர். எதற்காக அரசிலிருந்து விலகினார்களோ அதை வெளியிலிருந்து செய்வதற்கு அவர்கள் திட்டந்தீட்டுவார்கள் என்பது வெளிப்படை.

தமிழ், சிங்கள மக்களிடையே வதந்திகளைப் பரப்பி கலவரங்களை மூட்டி நாட்டைக் குழப்பும் தமது மரபுவழிப் பண்பாட்டை ஜே.வி.பி. ஆரம்பித்துவிட்டதென்பதன் ஓர் அறிகுறியே திருகோணமலையில் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும்.

அமைதியை விரும்பும் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராக திசைதிருப்பி கலவரங்களைத் தூண்டி விடுவதன்மூலம் நாடு குழம்பிப்போகும். அதனூடாகப் பொதுக் கட்டமைப்பைக் குழப்பும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளதை அரசும், மக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜே.வி.பியின் மேற்போந்த துரோகத்திற்கு பௌத்த பிக்குகளும் பிரித் ஓதி ஆசிவழங்கக் காத்திருப்பதால், சிங்கள மக்கள் மிகவும் நிதானமாகவும், விழிப்புணர்வுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

## உரிமைக் கோரிக்கைகளை உலகறியச்செய்ய

# இன்று திக்கத்தில் ஒன்று கூடுக

(துன்னாலை)

சுனாமியால் பாதிப்படைந்த வடக்கு-கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கான பொதுக்கட்டமைப்பை விரைவுபடுத்துமாறு வலியுறுத்தியும், பேரினவாதிகளின் பேரினவதாப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று வடமராட்சி திக்கத்தில் நடாத்தப்படவுள்ள மாபெரும் பேரணியில் அனைவரையும் அணி திரளுமாறு வடமராட்சி பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியும், மற்றும் கடற்றொழிலாளர் சங்கம் என்பன அழைப்பு விடுத்துள்ளன.

இது விடயம் தொடர்பில் இவ் அமைப்புகள் விடுத்துள்ள அறைகூவலில்,

தாயக விடுதலை நோக்கி ஆயுதந் தாங்கிப் போராடி, பல வெற்றிகளைச் சுமந்து தமிழர்களுக்கு மரபுவழிச் சமர்செய்யும் பலம் மிக்க படை ஒன்று உண்டு என்பதையும் தமிழினம் அரசியல் பலம் மிக்க இனம் என்பதையும் சர்வதேசம் உணர்ந்துள்ள காலம் இது.ஆனால் சிங்களப் பேரினவாததலைமைகளுக்கு இவை புரியாத ஒன்றல்ல. 23 வருட காலப் போரிலும் சுனாமிப் பேரலையாலும் மிகுந்த பாதிப்பைக்கண்டும் உறுதியோடு நாம் வாழ்கின்றோம். எனினும் எங்கள் உரிமை சுதந்திரம் பற்றி சிங்களத் தலைமைகள் பேச மறந்துவிட்டன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட நாம் இயல்பு வாழ்வை அடைந்தோமா? எமது நிலத்தில் எமது வீட்டில் வாழ்கின்றோமா? எமது கடலில் தொழில் புரிகின்றோமா? உறவுகள் ஒன்றாக இணைந்தோமா? எமது வீதிகளில் சுதந்திரமாக உலா வருகின்றோமா? இல்லை... இல்லை...!

எத்தனை உயிர்களை இழந்தோம் எவ்வளவு கோடி சொத்துக்களை இழந்தோம்? இழப்பதற்கு ஏதுமற்ற நாம் தொடர்ந்தும் வாழ்வதா? தமிழ் இனமே சிந்தித்துப்பார்! இந்நிலை தொடர்ந்தால் எதிர்கால எமது சந்ததிகளும் இயல்பு வாழ்வு வாழுமா? காலம் கனிந்து வரும் இவ்வேளையை கைவிட்டால் காலமெல்லாம் அவலம் தான் தொடரும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

பொதுக்கட்டமைப்பை தருவதற்கே இனவாதப் போக்கை காட்டும் சிங்கள இனவாத தலைமைகளிடம் இருந்து நாம் எமது சுதந்திரத்தை எதிர்பார்த்து இருப்பதா? பொறுமையின் எல்லை கடந்த நிலையில் நாமிருக்க புத்தர் சிலைகளை எம் மண்ணில் நிலைநிறுத்தி -பேரினவாதத்தைத் தூண்டும் சக்திகளை பார்த்துக் கொண்டிருப்பதா? புத்த தர்மத்தை தமிழர் மதித்தாலும் அவர் சிலையைக் கேவலப்படுத்தும் பேரினவாதிகளின் போக்கினை கண்டிப்போம். சிங்கள மக்களை நாம் அரவணைத்து மதித்தாலும் அவர்களுக்கு தவறான வழியில் இனவாதம் ஊட்டும் சிங்களத் தலைமைகளின் போக்கைக்கண்டிப்போம்.

சர்வதேச சமூகத்திற்கு சிங்களப் பேரினவாதப் பேய்களின் முகமுடியைக் கிழித்து தெரியவைப்போம். எமது உரிமைக் கோரிக்கைகளை உலகறியச் செய்வோம் திரண்டு வாருங்கள் எமது இறுதிப் போராட்டத்திற்கு முன்பாக ஓர் செய்தியை சிங்களப் பேரினவாத தலைமைகளுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் உரக்கச் சொல்வோம். எமது நிலத்தில் பேரினவாதக் கட்டளைப்படி தங்கியுள்ள படைகளுக்கும் ஓர் செய்தி சொல்வோம் "எமது நிலத்தில் எமது பலத்தில் தங்கி நிற்போம் நாங்கள்" எனும் எமது எண்ணத்தை எடுத்துரைப்போம்.

அன்பான தமிழினமே! காலம் கனிந்து வரும் வேளையில் எமது ஒற்றுமையின் வெளிப்பாட்டுடன் உணர்வுகளை தெரியப்படுத்தி எமக்கான சுதந்திர தாயகத்தை பெற்றுக் கொள்ள உறுதியெடுப்போம். உணர்வோடு உழைப்போம். இறுதிப் போருக்கு எம் தலைமையைக் கோருவோம்.

வாருங்கள் அணி அணியாக ஒன்று சேருங்கள்!" உரிமைக்குரலை உலகறியச் செய்வோம்" 'உரிமையுடன் எமது தாயகம் அமைப்போம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ந-101)

## றெஜினோல்ட் கூரேக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை இன்று விவாதத்திற்கு

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

தற்போது மேல்மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியில் 39 உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 36 உறுப்பினர்களும், ஜே.வி.பிக்கு 23 உறுப்பினர்களும, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு 4 உறுப்பினர்களும், 2 சுயேட்சைக்குழு உறுப்பினர்களும் உள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் 36 உறுப்பினர்களைத் தவிர்த்தால் எதிர்க்கட்சியில் 68 உறுப்பினர்கள் உள்ளனர். அதனால் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிக் கொள்வது அரசாங்கத்திற்கு சவாலாக அமையும். ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு விலகிய பின்னர் அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள இரண்டாவது பிரச்சினை இது என அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர். (ற)

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு தமிழ்மொழி மூல பயிற்சிக்கு 500பேர் தெரிவு

(கொழும்பு)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் 2005ஆம் ஆண்டு பயிற்சிகளுக்கான ஆசிரியர்களை தெரிவு செய்யும் நடவடிக்கை அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச் சேனை, கொட்டகல ஆகிய இடங்களில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு தமிழ் மொழி மூலம் 500 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆங்கில மொழி மூல பயிற்சிக்காக 155 பேரும், சிங்கள மொழிமூலபயிற்சிக்காக 765பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களுக்கு மகரகம, பலப்பிட்டிய, பேராதனை ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளில பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற-8)

# லயனல் பலகல்லவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆ.குழு விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்லவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கேள்விப் பத்திரம் கோராமல் இராணுவத்திற்கு 150 மோட்டார் கைக்கிள்களைக் கொள்வனவு செய்தார் என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்லவிற்கு எதிராகக்கிடைத்துள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக கடந்த வாரம் லயனல் பலகல்லவிடம் சுமார் நான்கு மணிநேரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆணைக்குழு அறிவித்திருந்தமைக்கமைய முன்னாள் இராணுவத்தளபதி ஆணைக்குழுவின் முன் ஆஜரானதாக தெரிவிக்கப்படுகிறது. (ா)

# முன்னாள் இந்தியப் பிரதமர் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திர குமார் குஜ்ரால் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எயிட்ஸ் தொடர்பாக நடைபெறும் செயல்திட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே முன்னாள் இந்திய பிரதமர் குஜ்ரால் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

'எச.ஐ.வி.க்கு எதிராகப் போராடுவோம' எனத் தலைப்பிடப்பட்டுள்ள இச்செயல்திட்டத்தை சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. (ற-4)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் கே. சிவநடராசா தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் கொழும்பு பல்கலைக்கழக புவியியற் துறை முதுநிலை விரிவுரையாளர் இரத்தினம் சிறிகாந்தன் முதன்மை விருந்தினராகவும் உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன், உடுவில் பிரதேசசெயலர் சி.திருவாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் ஆசியுரை வழங்குவார். (து)

# கறுவா ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறு விளைபொருள் ஏற்றுமதி திணைக்களம் கறுவா ஏற்றுமதியை 2010ஆம் ஆண்டு 18ஆயிரம் மெற்றித் தொனனாக அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

திணைக்களத்தின் தகவல் தொடர்பு உதவிப்பணிப்பாளர் கலாநிதி ஜெயானந்த வீரசிங்க இது குறித்து தெரிவிக்கையில்,

2010ஆம் ஆண்டளவில் இலங்கை கறுவா ஏற்றுமதி மூலம் வெளிநாட்டு நாணய மாற்றாக 800 கோடி ரூபாவைய் சம்பாதிக்கமுடியும். இது தொடர்பாக ஆறாண்டு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்

தற்போது 6ஆயிரத்து 605 ஹெக்ரேயர் காணியில் கறுவாசெய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்குப்புறம் பாக 3ஆயிரத்து 807 ஹெக்ரேயர் காணியில் கறுவாச் செய்கையை மேற்கொள்ள திணைக்களம் திட்டமிட்டுள்ளது என்றார். (ற-9)



## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இந்த உலகம் மாபெரும் பைத்தியக் கார விடுதி வாழும் அனைவரும் பைத்தியங்கள். சிலருக்குப் பணத்தின் மீது பித்து. மற்றும் சிலருக்குப் பெண்கள் மீது பித்து. வேறு சிலருக்குப் பெயரிலும் புகழிலும் பித்து. நான் கடவுள் பைத்தியமாக இருக்கவே விரும்புகிறேன்.

சுவாமி விவேகானந்தர்

## இலங்கைவங்கியின் நடமாடும் சேவை

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அடியார்களினதும், ஆலயத்தில் செயற்படும் அலுவலகர்களினதும் வசதிகருதி இலங்கை வங்கியின் விசேட கருமபீடம் ஆலய மேற்கு வீதியில் இன்று திங்கட் கிழமை முதல் 22 ஆம் திகதி வரை செயற்படுமென ஊர்காவற் துறை இலங்கைவங்கியின் கிளை முகாமையாளராக விஜயரட்ணம் அறிவித்துள்ளார். (ற)

## சிலை திறப்பு விழா

மகாவித்துவான் அமரர் பிரம சிறி மா.த.ந. வீரமணி ஐயரின் ஞாபகார்த்தமாக லண்டன் சிவயோகம் அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன் புனரமைக்கப் பட்ட அரங்குத் திரைநீக்க நிகழ்வும், சிலை திறப்புவிழாவும் இன்று காலை 9 மணிக்கு கோப்பாய்ஆசிரிய கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## ஹெல்கிசன்...

கப்படுகின்றது.

ஹெல்கிசன் அம்பாறையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்று பார்வையிடுவதுடன் கல்முனையில் முஸ்லிம்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்.

அதேவேளை இந்தியாவின் முன்னாள்பிரதமர் குஜரால் இன்று இலங்கை வருகைதரவுள்ளார். கொழும்பில் நடைபெறவுள்ள எயிட்ஸ் தொடர்பாக நடைபெறும் செயற்திட்டமென்றில் கலந்து கொள்வதற்காகவே இலங்கை வருகின்றார். (ச-8)

# பொதுக்கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதியின் முடிவு சரியானது

## நிதியமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு பகுதி மக்களின புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் குறித்து ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் சரியானதென, நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி இந்த முடிவை பலரினதும், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் எடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் முடிவால் கூட்டமைப்பில் இருந்த ஜே.வி.பி. வெளியேறியுள்ளது. இந்நிலையிலும் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவேன் என்று கூறுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை ஜனாதிபதி உணர்ந்து செயற்படுகின்றார் என்பதாகும். அவர் பொதுக்கட்டமைப்பில் விரைவில் கைச்சாத்திடுவாரென அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இராணுவ பலம்பொருந்திய நாடுகள் இலங்கையில் உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கூறியுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு நாம் செயற்படவேண்டும். இதில் ஜனாதிபதி சிறந்ததொரு முடிவை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

## ரெஜினோல்ட்...

நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ள நிலையிலேயே ரெஜினோல்ட் கூரே தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அதேவேளை சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி.வெளியேறிய பின்னர் மேல்மாகாண சபை முதன்முதலாக இன்று கூடவுள்ளது 39பேரைக் கொண்ட எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக்கட்சி இயங்கும். அதேவேளை ஜே.வி.பியும் எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளது. (ச-8)

## தமிழ்த்தேசியத்...

பிரஜைகளாக்கும் பல்வேறுநடவடிக்கைகள் சிங்கள பௌத்தபேரினவாதத்தால் மேற்கொள்ளப்பட்டது.

குடியுரிமை, நிலம், மொழி, கல்வி ரீதியாக மட்டுமன்றி இராணுவரீதியாகவும் தமிழ்மக்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகமாகும். சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையில் இருந்து விடுபட்டு விடுதலை வாழ்வு வாழவேண்டும் என்பதே தமிழ்மக்களின் உறுதியான நிலைப்பாடு. கடந்த 50வருடங்களுக்கு மேலாக எமது பட்டறிவின் வெளிப்பாடே இந்த விடுதலைவேட்கை.

இன்று இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு சிறு கட்டமைப்பை கூட ஏற்கமறுக்கும் ஒரு குரூரத்தை வெளிப்படுத்தி நிற்கிறது சிங்கள பௌத்த பேரினவாதம்.

இத்தகைய சிங்கள பௌத்த பேரினவாத குரூரத்தை தமிழ்மக்கள் ஒன்றிணைந்து தோற்கடித்து, ஆக்கிரமிப்பு படைகளிடம் இருந்து எமது பாரம்பரிய வாழ்விடங்களை விடுவித்து எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் எங்கள் சுயத்தை நாமே நிர்ணயிப்போம் என்று பிரகடனம் செய்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19,43)

## ஜே.வி.பியை....

கூட்டணிக்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களை அலரிமாளிகையில் சந்தித்து 3 மணிநேரம் பேச்சுநடத்திய பின்னர் பிரதமர், ஜே.வி.பிக்கு இவ் அழைப்பினை விடுத்துள்ளார். தொலைபேசி மூலம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திபில் கலந்துகொண்டவர்கள் ஜே.வி.பியினரை மீண்டும் கூட்டணிக்குள் கொண்டுவரும்படி பிரதமருக்கு வலியுறுத்தியுள்ளனர். இச்சந்திப்பில் ஆளும் கூட்டணியில் அங்கம்வகிக்கும் கட்சித் தலைவர்களான டக்ளஸ் தேவானந்தா, தினேஸ் குணவர்த்தன ஆகியோர் உட்பட சிரேஷ்ட அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று அமைச்சரவை மறுசீரமைப்பு அறிவித்தலை வெளியிடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது. (ச)

## பாராளுமன்றில்...

பை ஒரு சட்டமூலமாக பாராளுமன்றில் சமர்ப்பிப்பதை தாம் எதிர்ப்பதாக கடந்த புதன் அன்று ஐ.தே.க. எச்சரித்திருந்தது.

இதேவேளை ஜே.வி.பி அரசை விட்டு வெளியேறாமல் பொதுக்கட்டமைப்பை எதிர்க்காமல் இருக்கவுமே அரசாங்கம் முதலில் எண்ணி இருந்தது. எனினும் இதற்கு 113 எம்.பிக்கள் கைச்சாத்திட்டால் மட்டுமே தாம் சம்மதிப்பதாக விமல் வீரவன்ச ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேக்கு கடிதம் எழுதியிருந்தார். (ச-6)

## அமைச்சர்களின்...

ளுடன் தற்போது அமைச்சுப்பதவி வகிப்பவர்கள் சிலருக்கு பதவிகள் பறிபோகும் என்று தெரியவருகிறது.

இந்நிலையிலேயே எவரையும் வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொள்ள வேண்டாம் என ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.(ச-6)

## பொதுக்கட்டமைப்பை...

நிதித்துவத்தை வழங்க தீர்மானித்திருக்கும் நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் அவ்வாறு வழங்க முடிபு செய்திருப்பது அவர்களை ஏகபிரதிநிதிகளாக அரசாங்கம் அங்கீகரிப்பது போல் ஆகிவிடும்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மாற்றுக்கட்சி உறுப்பினர்கள் உள்ளார்கள், இந் நிலையில் ஜனாதிபதியின் பொதுக் கட்டமைப்பு குறித்த தீர்மானத்தை ஜே.வி.பி.ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. என அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரணிலின் அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்தபோது புலிகளிடம் இராணுவம் மட்டும் தான் இருந்தது. ஆனால் தற்போது வான்படையும் இரண்டு வானூர்திகளும் அவர்களிடம உள்ளன.

ரணில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தபோது வான்படையைப் பெற்றுபுலிகளுக்கு பொதுக்கட்டமைப்பின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து விடும் என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## உணர்வெழுச்சியுடன்...

தொடர்ந்து, அரங்கில் நிகழ்விற்கான விளக்க உரையினை பேர்னாட் அடிகளார் நிகழ்த்தினார்.

நிகழ்வில் கருத்துரைகளை பல்கலைக்கழக மாணவி யாழினி, துணைவேந்தர் மோகனதாஸ், ஆதீன முதல்வர், மௌலவி சகீர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். அதன் பின்னர் தமிழ்த்தேசியத்தின் குரல் பிரகடனம் வாசிக்கப்பட்டது. இப்பிரகடனம் சகல வெளிநாட்டுத்தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டது.

தொடர்ந்து அரங்கிலே சம நேரத்தில் அரங்க செயற்பாட்டுக்குழுவினரால் அரங்காற்றுகையும், மக்களுடனான உணர்வுப் பரிமாற்றல்களும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகள் கலாநிதி சிதம்பரநாதன், ஆசிரியர் விந்தன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வுகளின் போது மக்கள் கருத்துப்பகிர்வுகளும் இடம்பெற்றன.

அங்கு கருத்து வெளியிட்ட அனைவரும் 'எமது பலத்தை நாமே நிர்ணயிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டது. எமது விடுதலையை வென்று தருபவர் சூரியத் தலைவன் பிரபாகரன், அவர் வழியில் ஒன்றிணைந்து எமது விடுத்லையை வென்றெடுப்போம்' என முழக்கமிட்டனர்.

இந் நிகழ்விற்கு யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், மா.க.ஈழவேந்தன், எஸ்.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் நல்லை ஆதன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்தந்தை பேணாட் அடிகளார், அருட்தந்தை ஜெபநேசன் அடிகளார், யாழ்.பள்ளிவாசல் மௌலி மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரச திணைக்கள அதிகாரிகள் சங்கங்கள் சமாசங்களின் தலைவர்கள், செயலாளர்கள், புத்திஜீவிகள் என பலர் கலந்துகொண்டனர். (ச-19,43)


## திருமறைக் கலாமன்றம்
## கவின் கலைகள் கல்லூரி
## COLLEGE OF FINE ARTS
### ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

திருமறைக் கலாமன்றத்தின் "கவின் கலைகள் பயிலகம்" மீளுருவாக்கம் செய்யப்பட்டு கவின் கலைகள் கல்லூரியாக புதிய பொலிவுடன் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இக்கல்லூரிக்கு பின்வரும் கலைகளை பகுதிநேரமாகக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வாய்ப்பாட்டு
- பரதம்
- கதகளி
- மிருதங்கம்
- வீணை
- வயலின்
- புல்லாங்குழல்
- கிற்றார்
- ஓர்கன்
- ஓவியம்

### குறிப்புக்கள்

✠ விண்ணப்பிப்பவர்கள் ஏதாவது பல்கலைக்கழகமொன்றில் குறிப்பிட்ட பாடநெறியை கற்றுத் தேர்ந்தவராகவோ அல்லது அதற்குச் சமனான சான்றிதழ்களைப் பெற்றவராகவோ இருத்தல்வேண்டும்.

✠ அல்லது வடஇலங்கை சங்கீதசபை ஆசிரியர் தரம் சித்தி பெற்ற 5 வருடத்திற்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள்.

✠ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

✠ விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து அனுப்பிவைக்கலாம். விண்ணப்பமுடிவு திகதி 30.06.2005 வியாழக்கிழமை ஆகும்.

✠ விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி: பொதுச் செயலாளர், திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

238 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2393

திருமறைக் கலாமன்றம்

(C-1449)



எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

## நியூ சிற்றி ரேடர்ஸ்

மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

(C- சு)



## மனோகரா யாழ்

அதிரடி வெளியீடு




## நிறைஞ்சனாஸ்

சங்கானை

விஜயசாந்தி, லட்சுமி, சுஜாதா நடித்த

## சூர்யா

கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இன்டிபெண்டன்ஸ்டே டைரக்டர் ரோலண்ட் எம்ரிக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்

THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)

சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்

கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)

பாடசாலை ஊடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்



## பதவி வெற்றிடம்

### உள்ளகச் செய்தியாளர்கள்

ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)

### ஒப்புநோக்குநர்கள்

ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)
*(க.பொ.த. உயர்தரத்தில் சித்தி)*

### புத்தகம் கட்டுநர்கள்

பெண்கள் *(புத்தகம் கட்டுவதில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)*

வலம்புரி நிறுவனத்திற்கு 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 24.06.2005 அன்று காலை 10 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய வீண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.

இல:03, 2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஆளணி முகாமையாளர்
வலம்புரி


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.